ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கத்தோலிக்க எதிர்ப்பு

மலையக இராச்சியத்தின் அரசுரிமையைப் பெற்றபின் ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னனும் அவனது மனைவியும் பௌத்த மதத்தைத் தழுவினர். அத்துடன், மன்னன் நாட்டு மக்களின் மன மகிழ்ச்சிக்காக, புதிதாக விகாரைகளைக் கட்டினான். புராதன விகாரைகளையும் புனருத்தாரணம் செய்தான். அது மாத்திரமல்ல; சமய மற்றும் சமூக வைபவங்களையும் மிக உன்னத நிலையில் நடத்தினான். அத்தோடு, இதுவரை வழக்கொழிந்துபோன 'உபசம்பதா' எனும் நிகழ்வுகளை மீண்டும் ஏற்படுத்த இம்மன்னன் பெருமுயற்சிகளை எடுத்தான். அதற்காக, சியத்திலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைக்கப் பெரும் அக்கறை எடுத்தான். கி.பி 1741 இல் பௌத்த பிக்குகளை அழைத்துவர அனுப்பிய கப்பல் கடலில் மூழ்கி அதிலிருந்த அனைவரும் உயிர்துறந்தனர். அவ்வாறே, கி.பி 1747 இல் மற்றுமொரு கப்பலை மன்னன் அனுப்பினான். அக்கப்பலும் கடலில் பேராபத்தை சந்தித்தது.

மன்னன் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் பௌத்த மதத்திற்குக் கொடுக்கும் ஆதரவையும் அக்கறையையும் முழுப் பௌத்த மக்களுக்கும் காட்ட முயற்சித்தான். அதுவரை சிங்கள மன்னர்களால் கத்தோலிக்கர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஆதரவைக் கைவிட்டான். கத்தோலிக்க மத குருமார்களைக் கண்டியிலிருந்து விரட்டி அடித்தான்.

வேஉட மற்றும் களு அக்கல ஆகிய இடங்களில் வாழ்ந்த கத்தோலிக்கர்கள் தமது சொந்த ஊரைக் கைவிட்டு வஹகோட்டைக்குச் சென்று குடியேறினர். இதேவேளை, ஒல்லாந்த வர்த்தக சங்கமும் இந்த மலையக மாற்றங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருந்தது.

இம்ஹூஃப் எனும் ஆள்பதி கண்டி குறித்த தமது தொடர்புகளில் புதிய நடைமுறைகளை ஏற்படுத்தினான். அத்துடன், புதிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதைவிட, வேறு இனத்தவர்கள் இலங்கைக்கு வருவதைத் தவிர்ப்பதே மிக முக்கியமானது எனவும் ஒல்லாந்தர்கள் கருதினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பக் கையேடு விற்பனையில்...



கடந்த ஆண்டு க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பக் கையேடு கடந்த டிசம்பர் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து விற் பனைக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் அந்த விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து குறித்த விநியோ கத் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு அதன் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

விண்ணப்பிக்கும் சகல மாணவர் களும் குறித்த கையேட்டினை நன்கு வாசித்து விண்ணபப்படிவங்களைப் பூர்த்தி செய்யுமாறும் தம்மால் விண்ணப் பிக்கக்கூடிய சகல கற்கைநெறிகளையும் விண்ணபப்படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும் எனவும் இம்முறை 14 தேசிய பல்கலைக்கழகங் களுக்கு சுமார் 22,500 மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு இடமாற்றம்



தேசிய பாடசாலைகளில் எட்டு வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர் களுக்கு இம்மாதத்திலிருந்து இடமாற்றங்கள் வழங்கப்பட வுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 340 தேசிய பாடசாலைகளை மீள மைக்கும் செயற்றிட்டத்தின் பிரதான செயற்பாடுகளில் இதுவும் ஒன்றாக விளங்குவ தாகவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்துள்ளார்.

ஆசிரிய நியமனங்களை வழங்குவ தில் பாரிய சிக்கல் நிலவுகின்றது. கொழும்பில் உள்ள சில முன்னணிப் பாடசாலைகளில் தேவைக்கு மேலதிக மாக ஆசிரியர்கள் கடமையில் உள்ள அதேவேளை, பின்தங்கிய பிரதேசங் களில் அமைந்துள்ள சில பாடசாலை களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இந்நிலை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, இந்த செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலைகளில் நிலவும் தளபாடம் மற்றும் கட்டடங்கள் போன்ற பௌதீக வளத் தட்டுப்பாடு களும் நிவர்த்தி செய்யப்பட உள்ளதாகவும் சில தேசிய பாடசாலைகளுக்கு பாடசாலை அதிபர்களைப் புதிதாக நியமிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## புதிய ஆசிரிய நியமனங்கள்

**ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் அரசாங்கப் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளுக்காக 8,874 பேருக்கு புதிதாக ஆசிரிய நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித் துள்ளது. இதன்படி, இந்த வருடத்தில் மேற்படி புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

# 5,000 ரூபா ஞாபகார்த்த நாணயக்குற்றி

இலங்கை மத்திய வங்கியின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 5,000 ரூபா பெறுமதியுடைய முதலாவது பலவர்ண வெள்ளியினா லான ஞாபகார்த்த நாணயக்குற்றி அண்மையில் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது.



வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் வெளியிடப்பட் டுள்ள இந்த நாணயக்குற்றியானது 38.61 மி.மீற்றர் விட்டமும் 28.28 கிராம் நிறையும் கொண்டது. 5,000 ரூபா பெறுமதியுடைய இந்த நாணயக் குற்றி மத்திய வங்கியின் தலைமை அலுவ லகத்திலும் நாணய அரும்பொருட் காட்சிசாலையிலும் மத்திய வங்கியின் மாகாண அலுவலகங் களிலும் 7,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதா கத் தெரிவிக்கப் படுகின்றது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# தரம் 12, 13 களுக்கான ஆசிரிய வழிகாட்டி நூல்கள்

எதிர்வரும் வருடத்தில் தரம் 12, 13 வகுப்புகளுக்கான ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட் டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

152 வகைகளில் 1,87,499 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோ கிக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணை யாளர் நாயகம் ஜகத் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

# பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.....)

**கெப்ஸ்களை (Caps) வெற்றியீட்டிய மிகுதி வெற்றியாளர்கள்:**

38. எம்.எஃப்.எஃப்.ஃபர்ஹானா, 308/B, முருதகஹமுல்ல, கெலிஓயா.
39. எம்.என்.எஃப்.சுமையா, 169, நீதிமன்ற வீதி, மராவ, மாவனல்லை.
40. என்.ஏ.எஃப்.ஆதிலா, 19/2, வடக்கு வீதி, புத்தளம்.
41. எம்.ஆர்.எஃப்.ரவ்லத், 40, 5 ஆம் குறுக்கு வீதி, புத்தளம்.
42. நா.தர்ஷினி, 222, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா.
43. டி.சுதர்ஷினி, 188, கொழும்பு வீதி, கண்டி.
44. எச்.என்.எம்.ஹிஷாம், 86, கிதுலம்பிடிய, உலுவிடிகே, காலி.
45. எம்.அஃப்லால் ரிஸ்வி, 64, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, கொழும்பு-02.
46. ஆர்.நிரோஜன், 172/12, நியூலேன், நோர்வூட்.
47. சோ.வினோஜ்குமார், 132/2A, கோரக்கர் வீதி, சம்மாந்துறை.
48. ஏ.ஏ.அப்துர் றஹ்மான், 7/3, ஜின்னா வீதி, காத்தான்குடி-06.
49. எம்.எம்.பஸ்னா, 80, ரஜவெல்ல-02, ரஜவெல்ல.
50. எம்.எஸ்.எஃப்.ஷஃப்னா, 37/A, தெலும்புகஹவத்த, அக்குறனை.
51. டி.ஆர்.ஆன்.டிலுக்ஷி,
    மே/பா ரவிக்குமார், 64 புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13.
52. த.அபிராமி, பிள்ளையார் கோவிலடி வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
53. ஜே.ஹம்ஸா, 17/1, நங்குருகம, மாவனல்லை.
54. எம்.அஸ்மத், இல-09, பெரக் ஒழுங்கை, கொழும்பு-02.
55. எம்.எஃப்.எஃப்.ஹஃப்ஸா,
    43/1, பள்ளிவாசல் வீதி, வெயாங்கல்ல, அகலவத்த.
56. எம்.எஸ்.அம்னா, 112/4, உடுஹுறுவ, பத்தம்பிட்டி, றம்புக்கன.
57. சி.சஞ்ஜீவன், 53, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
58. தி.சஜீவ், மதினா நகர், 3 ஆம் ஒழுங்கை, வவுனியா.
59. யு.எச்.எஃப்.ஃபஸ்ரின்,
    4 ஆம் ஒழுங்கை அல்-மனார், மண்டலக்குடா, கல்பிட்டி.
60. எம்.எம்.அகீல் அஹமட், வைத்தியசாலை வீதி, கிண்ணியா-03.
61. எம்.ஃபைஸ் முஹம்மத், 18, பாகீர் மாகார் வீதி, மருதானை, பேருவளை.
62. டீ.தனுக்ஷன், இல-14A, தனேஸ்குமார், நல்லகொட, வெலிப்பன்ன.
63. ஆர்.லக்ஷன், இல-76, கிரோன் வீதி, நீர்கொழும்பு.
64. எம்.என்.எஃப்.ரிஹாமா, 90/C/1, உடுகொட, ருக்கஹாவெல.
65. எம்.எஸ்.எஃப்.பர்வினா,
    01, ஹிஸ்புல்லாஹ் வீதி, பாலமுனை-11, ஆரையம்பதி.
66. எல்.சஞ்ஜீவ்காந்த், 25, சம்பத்உயன, டிக்கிரியா, அலுவிஹார, மாத்தளை.
67. எம்.ஆர்.பாதிமா, 336, தம்பகிரிகம, நாரம்மல, குருணாகல்.
68. எம்.எஸ்.எஃப்.சுஹா,
    241, 3 ஆம் குறுக்குத்தெரு, 3 ஆம் ஒழுங்கை, புத்தளம்.
69. கோ.மரின் விதுர்ஷிகா,
    410, ஹொறவபொத்தான வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
70. கே.சங்கர்நாத், 23 மெயின் வீதி, கந்தப்பளை.
71. வி.திருச்செல்வம்,
    19B, 1 ஆம் ஒழுங்கை, ஸ்ரீபாத மாவத்தை, இரத்தினபுரி.
72. எஸ்.சதுர்ஷனா, 174/25/20 அல்விஸ் டவுன், ஹெந்தல, வத்தளை.
73. மோகன் நிவேதினி, 50, பாஹிராவ கந்தபத், கண்டி.
74. எம்.என்.இஜாசுல் அஹமட், 275, பிரதான வீதி, டிக்கோயா.

*(மிகுதி அடுத்த வாரம்)*

30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பெயர்/முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம் /
அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று
என்பன எல்லா மாவண/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்...!



நாட்டில் ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக, தொற்று நோய்கள் பரவும் சாத்தியங்கள் அதிகரித்தே காணப்படுகின்றன. அந்தவகையில், கண் நோயும் தொற்று நோய்களில் ஒன்றே. தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் இந்நோய் பரவி வருகின்றது. இது 'அடினோ' என்ற வைரஸ் காரணமாக, நிகழும் 'வைரல் கன்ஜக்டிவ்' என்னும் விழிவெண் படலத்தைத் தாக்கும் நோயாகும். பாடசாலை மாணவர்களே, அநேகமாக இந்நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.


## நோயின் அறிகுறிகள்

- ★ கண்கள் சிவப்பு நிறமாதல்
- ★ வீக்கம் ஏற்படல்
- ★ கண்ணில் பூள் சாறுதல் மற்றும் கண்ணீர் வடிதல்
- ★ கண் அலற்சி ஏற்படல்
- ★ நோவு/வலி என்பனவற்றை உணர்தல்
- ★ பிரகாசமான வெளிச்சத்தைப் பார்க்கும்போது கண்கள் கூசுதல்...

மேற்கூறிய அறிகுறிகளுடன் கண் நோய்க்கு ஆளானவர்கள் குறைந்த பட்சம் 5 நாட்களுக்காவது இதனால் சிரமப்படுவார்கள். அதன்பின்னர் குணமடைந்து விடுகின்றனர். 2-3 நாட்களுக்குள் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள், வேதனைகள் குறைவடையாவிட்டால் உரிய வைத்தியரை நாட வேண்டியது அவசியமாகின்றது. விழிவெண்படலத்தில் ஏற்படும் மாறுதல் 5 நாட்களுக்கு மேல் நீடிக்குமானால் அது மோசமான பக்கவிளைவுகளை ஏற்படுத்த இடமுண்டு. இதனால், விழிவெண் படலம் தடிப்பாகி பார்வைப் பாதிப்பும் ஏற்படலாம். இத்தகைய நிலைமை ஏற்படுமாயின், நோய்க்குள்ளானவர் விசேட சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

## நோய்க்குள்ளான பின்னர்

இவ்வாறான கண் நோய்த்தொற்றுக்குள்ளானவர் மிகவும் சுத்தமான நீரால் மட்டுமே முகம் கழுவ வேண்டும். வைத்தியரின் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெறாமல் இலை குழைகள், பூக்கள், வேர்கள் என்பனவற்றை அவித்து அந்த நீரால் கண்களைக் கழுவுதல் தவிர்க்கப்பட வேண்டும். நாம் வாழும் சூழலில் ஏராளமான நோய்க் கிருமிகள் உள்ளன. அவை மரம் செடிகொடிகளில் ஒட்டி அவற்றைத் தமது வாழ்விடங்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே,



அத்தகைய இலை, வேர், பூக்கள் அவிக்கப்பட்ட நீரால் முகம் கழுவும்போது, அதில் இருக்கும் பக்ற்றீரியாக்கள், வைரஸ்கள் மூலம் வேறு நோய்கள் கண்ணில் தொற்றிக்கொள்ள இடமிருக்கின்றது. அதனால், சுத்தமான நீரால் மட்டுமே முகம் கழுவுதல் வேண்டும்.





## பரவுவதைத் தடுக்க

இக்கண் நோய் பூள் சாறுதல், கண்ணீர், எச்சில் ஊடாகப் பரவும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அதனால், இவ்வாறு கண் நோய்க்குள்ளானவரிடம் நெருங்காமல், அவரின் எச்சில், கண்ணீர் பூள் சாறுதல் போன்ற திரவத்தன்மைகளில் இருந்து சுகதேகிகள் பாதுகாப்புப் பெறல் வேண்டும்.


இத்தகைய நோயாளி நோய் குணமாகும் வரையில் பொதுவாக, நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சுகதேகியான ஒருவர் கண் நோய்க்குள்ளானவர் பயன்படுத்திய மேசை, கதிரை, புத்தகங்கள் ஆகியவற்றைத் தொட்டபின்னர் கண்களைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர் கைகளை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல் வேண்டும். முதலில் கொதித்தாறிய நீரிலும் பின்னர் சவர்க்காரம் இட்டும் கழுவினால் மேலதிக பாதுகாப்பாக இருக்கும். இவ்வாறு எச்சரிக்கையாக நடந்து கொள்வதன்மூலம் கண் நோய் விரைவில் குணமடைவதோடு, ஏனையவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்படாமல் பாதுகாப்பளிக்கவும் முடியும்.

அமீர் ஹுஸைன்

# நமக்குப் பசி எப்படி ஏற்படுகின்றது?





பொதுவாக இரைப்பை வெறுமையாக இருக்கும்போது பசி உண்டாகின்றது எனப் பலரும் எண்ணக்கூடும். ஆனால், அதில் எவ்வித உண்மையுமில்லை. இரைப்பை காலியாக இருப்பதற்கும் பசி ஏற்படுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நோயால் அவதியுறும் ஒரு நோயாளியின் இரைப்பை காலியாக இருப்பினும், அவருக்குப் பசி ஏற்படுவதில்லை. பிறந்த குழந்தைக்கும்கூட சில நாட்களுக்குப் பசி ஏற்படுவதில்லை. அப்படியானால் நமக்குப் பசி எப்படி ஏற்படுகின்றது?

நாள்தோறும் நமது உடலுக்குத் தேவைப்படும் சக்தியை ஈடுகட்ட, பழுதடைந்த தசைகளைப் புதுப்பிக்க, உடல் வளர்ச்சி பெற நாம் உணவை உட்கொள்கிறோம். அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உட்கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட அளவு உணவையே உண்ணுகிறோம். அதாவது, நம் உடலில் ஒரு செயல் நாம் உண்ணும் உணவின் அளவை நிர்ணயிக்கின்றது.

உண்ணும் உணவிலுள்ள சத்துக்கள் நம் குருதியில் கலந்துள்ளன. தொடர்ந்தும் நம் உடலுறுப்புக்கள் மேலும் மேலும் வேலை செய்வதால், அச்செயல்களுக்குத் தேவையான சக்தியை குருதியிலுள்ள உணவு சக்திப்பொருள்களில் இருந்து எடுத்துக்கொள்வதால் அதன் அளவு படிப்படியாக குருதியில் குறைகின்றது. உணவுச் சக்திப்பொருள்

இவ்வாறு குறையும்போது, இச்செய்தி மூளையிலுள்ள பசி மையமாகிய 'ஹைப்போதலாமஸ்' எனும் பகுதிக்கு நரம்புகளின் வழியாக அனுப்பப்படுகின்றது. ஹைப்போதலாமஸின்கீழ் நடுப்பகுதியும் பக்கவாட்டுப் பகுதிகளும் இரைப்பை, குடல்கள் ஆகியவற்றின் செயல்களை ஒழுங்கு படுத்துகின்றன. இருப்பினும், நாம் பசியாக இருக்கும்போது, இப்பகுதிகளின் செயல்கள் வேகமாக நடைபெறுவதால் இப்பகுதிகளில் ஒருவித சத்தம் கேட்கிறது. இச்சத்தமும் வலியும் குளுக்கோசின் அளவு குருதியில் குறைவதால் ஏற்படுகின்றது. இச்செயல்கள் உடலுக்கு உணவு தேவை என்பதனையே எடுத்துக்காட்டுகின்றன. நாம் அதிக பசி ஏற்படும்போது உணவுப் பொருட்களின் முக்கியத்துவத்தைப் பாராது. சத்துள்ள உணவுகளை ஆராயாது கிடைப்பதை உண்கிறோம்.

உணவிலுள்ள புரதம் தசை வளர்ச்சிக்கு உதவுகின்றது. மா மற்றும் கொழுப்புப் பொருட்கள் சக்திக்கு உதவுகின்றன. தாதுக்கள் எலும்பு வளர்ச்சிக்கு உதவுகின்றன. விற்றமின்கள் நோயைத் தடுக்க உதவுகின்றன. மற்றும் நீர் போன்ற ஒவ்வொன்றும் சிறப்பான செயல்களைச் செய்கின்றன. இவை குறைவடைவதாலேயே நோய்கள் ஏற்படுகின்றன. உணவுச் சக்திப் பொருட்கள் குருதியில் குறைந்தால் பசியும் ஏற்படுகின்றது. அத்துடன் வாய் மற்றும் இரைப்பையிலுள்ள சில பகுதிகள் அதிகமாக உண்பதையும் தடுத்து விடுகின்றன.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டல், ஆலோசனை கூறுதல் அவசியப்படும் சந்தர்ப்பங்கள்



## கல்வி முகாமைத்துவம் - 36

### கற்றலுக்கான ஆலோசனைகள்

**இன்றைய மாணவர்களை கல்விப் பாதையில் பயணிக்க வைப்பதற்கு திசைகாட்டியாகக் காணப்படுவது வழிகாட்டுதலும் ஆலோசனை கூறுதலுமேயாகும். இவ்வழிகாட்டுதலும் ஆலோசனை கூறுதலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் அவசியப்படுகின்றன. அவையாவன;**

**1. உரியவாறான பயிற்சிகளைத் தெரிவு செய்வதற்கு உதவுதல்:** தமக்கும் சமுதாயத்துக்கும் பயன்படும் வகையில் அமையும் பயிற்சிகளைத் தெரிவு செய்வதற்கு வழிகாட்டுதலும் ஆலோசனை கூறுதலும் அவசியமாகும்.

**2. தொழில் முறையைத் தெரிவு செய்வதற்கு உதவுதல்:** இன்று தொழில் துறையைப் பொறுத்த வரையில், அது மிகவும் விரைவாக மாறிக்கொண்டிருக்கின்றது. எனவே, இன்றைய மாணவர்களுக்கு தற்போதுள்ள தொழில் வாய்ப்புக்கள், புதிய துறையில் எழுந்துள்ள புதிய





தொழில் முயற்சிகள் அல்லது முறைகள் என்பன பற்றிய தெளிவுறுத்தல்கள் அவசியமாகின்றன. அப்புதிய தொழிற்துறைகளுக்கு வேண்டிய தகைமைகள், திறமைகள், அனுபவங்கள் பற்றியும் அவர்களுக்கு அறிவுறுத்தப்படல் வேண்டும். புதிய தொழில்களைத் தெரிவு செய்வதில் அவர்களுக்கு உதவ வேண்டும். அத்தொழில்களால் அவர்கள் பெறவுள்ள நன்மைகள் பற்றி உரிய முறையில் விளக்கப்படல் வேண்டும். இவை யாவற்றையும் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை கூறுதலின் மூலமே செயற்பட வைக்க முடியும்.

**3. தாமாகவே தொழிலைத் தேடிக்கொள்வதற்கு இளம் வயதினரை ஊக்குவித்தல்:** தற்காலத்தில் பெரும்பாலான இளைஞர்-யுவதிகள் ஆரோக்கியமான வகையில் தாமாகவே தொழில்களை ஆரம்பிக்கின்றனர். இவர்களை வழிப்படுத்துவதற்கு கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சில ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் எந்தெந்தத் துறைகளில் தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பது பற்றிய அறிவையும் அத்தொழில்களோடு தொடர்புடைய ஸ்தாபனங்கள், தொழில்நுட்பங்கள், தேவையான பொருளாதார வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமாகும். அத்துடன், தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது போன்ற விடயங்கள் பற்றிய அறிவு, ஆலோசனைகள் என்பனவற்றை வழங்குவதுடன், தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதும் அதனைக் கண்காணித்து வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல உதவுவதும் முக்கியமான அரும்பணியாகும்.

**4. புதிதாகத் தொழில்களில் பிரவேசிப்போரை சரியான முறையில் அறிமுகம் செய்தல்:** எமது நாட்டில் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியேறுபவர்கள் இளம் பருவத்தினராக உள்ளனர். இப்பருவத்தினருக்கு கால சூழ்நிலைக்கேற்ப, தங்களைப் பொருத்தமான முறையில் வழிநடத்திக்கொள்ள வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அவசியமாகின்றன.

**5. பிரச்சினைகள் மற்றும் சிக்கலான சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு உதவுதல்:** மாணவர்களுக்கு அவர்களின் வாழ்வில் சில சந்தர்ப்பங்களில் குழப்பங்களும் பிரச்சினைகளும் உண்டாகின்றன.இதனால், அவர்கள் மன அழுத்தங்களுக்கும் கவலைகளுக்கும் ஆளாகின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் அவர்களுக்கு அரவணைப்பாகவும் ஆறுதல் அளிப்பதாகவும் அமைகின்றன.



**6. விசேட உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உதவுதல்:** சில மாணவர்கள் பின்னடைவு உள்ளவர்களாகவோ அல்லது விசேட தேவையுள்ள பிள்ளைகளாகவோ இருக்கலாம். அத்தகையோருக்கு விசேட உதவிகள் தேவைப்படும். அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மட்டத்திலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**7. பாடசாலைக்கு வெளியே அதற்கான நேரம் ஒதுக்கப்படுவதை நிச்சயித்துக் கொள்ளல்:** கல்லூரிக்கு வெளியே சிறிது நேரத்தை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக ஒதுக்குதல் என்பன மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்ட செயற்பாடாகும். இதனால், மாணவர்களின் கல்வி முயற்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அவர்களின் முன்னேற்றத்திற்கும் அவை வழிவகுக்கும். அவர்களின் திறமைகள் உள்நாட்டில் பயன்படுத்தப்பட வேண்டுமாயின், அவர்கள் தம் பகுதியிலிருந்து வெளியேறி பிற இடங்களுக்குச் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் என்பன பயன்படுத்தப்படலாம்.

(தொடரும்)

**-எம்.ஏ.எஃப்.சப்ரானா**

## 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



தடல்ல அல்-முபாரக் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி எஃப்.ஸைனப், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஸுஹைல்- ஜுலைஹா தம்பதியரின் புதல்வியாவார்.



சபீனா பர்வீன், 177 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கேகாலை மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இவர், லியாவுதீன்-சகீலா தம்பதியரின் புதல்வியாவார்.



மட்/ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அப்னீரத் அஹமட், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அமானுல்லாஹ்-பிர்தௌஸியா தம்பதியரின் புதல்வராவார்.



கொடவெல முஸ்லிம் வித்தியாலய மாணவி பி.ஊர்மிளா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ஏ.தர்ஷிகா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தலவாக்கலை த.ம.வித்தியாலய மாணவியாவார்.



தெல்லங்க அஸ்-ஸிராஜ் ஆண்கள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.ஆசிக், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சித்தீக்-பர்ஸானா தம்பதியரின் புதல்வராவார்.



ப/தம்பேத்தன்னை இல.2 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஜே.சரோன், 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜோதிவேல்-வனிதா தம்பதியரின் புதல்வராவார்.



கொட்டம்பபிடிய மு.மத். கல்லூரி மாணவி அதிய்யா ஹஸீன், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் ஜப்பார்-ஜுமானா தம்பதியரின் புதல்வியாவார்.



தலவாக்கலை த.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஜி.நிஷானா, 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவன் கு.விமலன், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குணநேசன்-குசலகுமாரி தம்பதியரின் புதல்வராவார்.



யா/குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வித்தியாலய மாணவன் யோகலிங்கம் கனுசன், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அப்துல் ஹாலிக், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மட்/அந்-நாஸர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், சதாத்-சித்தி நஜீமா தம்பதியரின் புதல்வராவார்.



மன்/மாவிலங்கேணி றோ.க.த.க.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மெக்ஸ் மிலியன், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர் றொபேட்-யுஸ்ரின் யுகந்தி தம்பதியரின் புதல்வராவார்.



*கு/வாரியபொல ஹேனகெதர முஸ்லிம் வித்தியாலயத்தைச் சேர்ந்த எப்.அதிகா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மாஹிர்-ஆயிஷா தம்பதியரின் புதல்வியான இவர், தனது வகுப்பாசிரியையுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம் நாட்டு
# பற்றி அறிந்

*இலங்கை ஒரு விவசாய நாடாகும். 1950 இன் பின் தொழிற்துறைகள்மீது இலங்கை மக்கள் நாட்டம் கொள்ள ஆரம்பித்தனர். 1960 ஆம் ஆண்டுகளில் அரச மற்றும் தனியார் கைத்தொழிற்துறைகள் ஆரம்பிக்கப் பட்டன. எனினும், இலங்கையை ஒரு கைத்தொழிற்துறை நாடாக இனம் காண மேலும் பல ஆண்டுகள் தேவையாயினும் 1977 இன் பின்னர் தனியார்துறை, தொழிற்துறை அபிவிருத்திக்கு முக்கியத்துவம் செலுத்தியதால் தேசிய பொருளாதா ரத்தில் தொழிற்துறைக்கு விசேட இடம் கிடைத்தது.*



## காலனித்துவ காலத்திற்கு முன்பு

வெளிநாட்டவர்கள் இலங்கையை ஆட்சிசெய்த காலப்பகுதியில் நாட்டின் பிற துறைகள் மட்டுமன்றி கைத்தொழிற்துறையும் வீழ்ச்சி அடைந்திருந்தது. காலனித்துவ நாடாக, மாறுவதற்கு முன்னர் நாட்டில் கைத்தொழிற்துறைகள் சில இருந்தன. களிமண்ணால் மட்பாண்டங்கள் தயாரித்தல், துணி நெய்தல், தங்கம் வெள்ளி ஆபரணங்கள் செய்தல் ஆகிய தொழிற்துறைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மன்னராட்சி காலத்தில் இந்தக் கைத்தொழிற்துறை களை மேற்கொண்டு வந்தவர்களுக்கு கிராமங்கள், பிரதேசங்கள் அன்பளிப் பாகக் கொடுக்கப்பட்டு அவர்களுக் குப் பெருமளவு தொழிற்துறை வாய்ப்புகளும் அளிக்கப்பட்டன.

அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான அனைத்து விடயங் களும் அந்தந்த தொழிற்துறையின ரால் உருவாக்கப்பட்டன. பரம்பரை பரம்பரையாக இத்தொழிற்துறைகள் கடைப்பிடிக்கப்பட்டன என்பதற்கு அவர்களின் பெயர்கள், பெற்றோர் கள், மூதாதையர்கள் பெயர்கள் சான் றுகளாக அமைகின்றன. மன்னர்களுக் கும் அவரைச் சார்ந்திருந்த அதிகாரி களுக்கும் அரண்மனை ஊழியர் களுக்கும் உடைகள், ஆபரணங்கள், மருந்துவகைகள், உணவுகள் ஆகிய அனைத்து விட யங்கள் தொடர் பான தொழிற் துறைகளும் இலங்கையர் களால் மேற்கொள் ளப்பட்டன.



## காலனித்துவ காலப்பகுதி

வெளிநாட்டவர்கள் நாட்டை ஆக்கிரமித்த பின்னர் நமது தொழிற்துறைகளுக்கு அவர் களின் உதவிகளும் அனுசரணைகளும் கிட்டவில்லை. அவர்களின் நாட்டுக்கான கைத்தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை நம் நாட்டிலிருந்து பெற்றுக்கொள்வதே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. அவ்வாறே, அவர்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கே முக் கியத்துவம் வழங்கினர். இதன்படி, நீண்ட காலம் அந்நியர்கள் இலங்கையை ஆண்ட தனால் நமது கைத்தொழிற்துறைகள் முழு மையாக அழிந்து போயின. நம்மவர் களும் தொழிற்துறை நுணுக்கங்களை, அனுபவங்களை இழந்தனர் அல்லது மறந்தனர். இதன் அடிப்படையில் நமது நாட்டுக்குப் பிற நாட்டு உற்பத்திகள் கொண்டு வரப்படுதல் ஆரம்பமாயிற்று.

## கைத்தொழிற்துறைகளுக்கு அரசின் அனுசரணை

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் அதாவது,1930 ஆம் ஆண்டுகளில் இங்கு பற்றாக்குறையாக இருந்த பொருட்கள் சில வற்றை இங்கேயே உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கைகளை எடுத்தது. அத்துடன், அரச அனுசரணை கிடைக்கும் தொழிற்துறை களும் உருவாகத் தொடங்கின. பின்னர் பிரித்தானிய ஆட்சியாளாகள் அடிப்படை ஏற்றுமதித் தயாரிப்பு தொழிற்துறைகள் சிலவற்றை இலங்கைக்கு அறிமுகம் செய்து வைத்தனர். 1922 இல் கைத்தொழிற்துறை ஆணைக்குழுவினால் கைத்தொழிற்துறை பணியகம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை யில் பரவலாக உள்ள நீர்மின் உற்பத்தி ஆற்றலைப் பயன்படுத்தி தொழிற்துறை களை ஆரம்பிக்கலாம் என அந்தப் பணிய கத்தினால் பரிந்துரைக்கப்பட்டது.

'டொனமூர்' அரசியலமைப்பு முன்வைக் கப்பட்டதன் பின்னர் வங்கி ஆணைக்குழு வினால் தேசிய வணிக வங்கிகள் ஆரம்பிக் கப்பட்டன. சந்தைகளுக்கு பண்டங்களை விநியோகிப்பதில் வணிக வங்கிகள் உதவின. 1939 இல் வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டதுடன், தேசிய முதலீட்டாளர்களுக்குப் பலவிதமான ஊக் குவிப்புகள் வழங்கப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் பின்னர் தொழிற்துறை அபி விருத்தியில் அரச தலையீடுகள் இடம் பெற்றன. தும்பு, இரும்பு, மருந்துகள், கடதாசி, கண்ணாடி, பீங்கான் சம்பந்தமான தொழிற்துறைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## கைத்தொழிற்துறைகளை நிலைப்படுத்தல்

ஏதாவது ஓர் உற்பத்தி அல்லது தயாரிப் புக்கெனவே, தொழிற்துறை ஒன்று ஆரம் பிக்கப்படுகின்றது. தொழிற்துறையொன் றினை ஆரம்பிக்கும்போது, கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. தொழிற்துறையின் இலாபத்தன் மையை அதிகரிக்கவும். செலவினங்களைக் குறைக்கவும். நீண்டகால இருப்புக்காகவும் இந்த விடயங்கள் மீது அக்கறை செலுத்தி அவற்றின் இலாப நட்டங்கள் குறித்து ஆராய்ந்து உத்தேச தொழிற்துறையை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமாகும். இதன்படி, தொழிற்துறையை ஒருநிலைப் படுத்துவதில் கவனம் செலுத்தப்படவேண் டிய விடயங்கள் பின்வருமாறு;

## மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் இலகுத்தன்மை

தொழிற்துறைக்குப் பலதரப்பட்ட மூலப் பொருட்கள் அவசியமாகும். உற்பத்தியின் இயல்புக்கு ஏற்ப மூலப்பொருட்கள் பல வகைப்படும். சில மூலப்பொருட்கள் மிக அதிகமாகவும் சில மூலப்பொருட்கள் சொற்ப அளவிலும் தேவைப்படும். மூலப் பொருட்கள் இருக்கும் இடத்திலிருந்து தொழிற்துறை அதிக தூரத்தில் இருக்குமா யின், மூலப்பொருட்கள் அனுப்புதலுக்கு அதிக செலவீனங்கள் ஏற்படும். இது நிறுவனத்தின் இலாபத்தன்மையை பாதிக் கும். இதனால், மூலப்பொருட்கள் இருக் கும் இடத்திற்கு அண்மையில் தொழிற் துறையை நிலைப்படுத்துவது அவசியம்.

## போக்குவரத்து வசதிகள்

தொழிற்துறையின் வெற்றிக்கு சிறந்த போக்குவரத்து வசதிகள் அவசியம். சில உற்பத்திகளை துரிதகதியில் பாவனையா ளர்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண் டியிருக்கும். அதேபோல் நவீன போட்டி உலகில் இலகுவான போக்குவரத்து முறைகள் இருப்பது அவசியமாகின்றது.

## வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதிகள்

தொழிற்துறை பிரதேசத்திற்குள் மூலப் பொருட்களைக் கொண்டு வரவும். உற்பத் திப் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லவும், ஊழியர்களுக்குத் தொழில் புரியும் இடத்திற்கு இலகுவாகச் சென்று வரவும், கொடுக்கல்-வாங்கல் செய்பவர்கள் தொழிற்சாலைப் பகுதிக்குள் பிரவேசிக்கும் வசதிக்கு ஏற்ப சிறந்த போக்குவரத்து வசதிகள் இருக்க வேண்டும்.தொழிற்சாலை வளாகத்திற்குள் வாகனங்களை நிறுத்தக் கூடிய வசதிகளும் இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடின், உற்பத்திப் பொருட் களை எடுத்துச் செல்லவரும் வியாபாரிகளுக்கு நெருக்கடிகள் ஏற்படும். இது தொழிற்துறையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமையும்.

## எரிபொருட்கள் மற்றும் நீர் வசதிகள்

எரிபொருட்களும் நீர் வசதிகளும் எந்த வொரு தொழிற்துறைக்கும் அவசியமான தாகும். ஒரு சில தொழிற்துறைகளுக்கு மின்சாரமும் மேலும் சில தொழிற்துறை களுக்கு வேறு வகையான எரிபொருட்களும் தேவைப்படும். உதாரணமாக, பாரியளவி லான ஆடைத்தொழிற்துறைக்கு மின்சாரம் அத்தியாவசியமாகும். இதனால், மின்சார வசதியுள்ள இடத்திலேயே ஆடைத் தொழிற்சாலை அமைக்கப்படவேண்டும். அதேபோன்று, கூரை ஓடு, செங்கற்கள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு விறகு அவசியமாகும். விறகை இலகுவா கப் பெறக்கூடிய இடத்தில் தொழிற்சாலை அமைய வேண்டும். இதற்கு அதிக நீரும் அவசியமாகும்.

## உழைப்பாளர்களின் தேவை

தொழிற்துறைக்கு உழைப்பாளிகள் படை அவசிய மாகும். ஒருசில



சீனி ஆலை



தேயிலை தயாரிப்பு



மாணிக்கக் கல் அகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழிற்துறைகள்
# து கொள்வோம்









தொழிற்துறைகளுக்கு பயிற்றப்படாத உழைப்பாளர்கள் தேவைப்படுவர். வேறு சில தொழிற்துறைகளுக்கு பயிற்றப்பட்ட முகாமைத்துவ மற்றும் நிபுணத்துவத் திறன் கொண்ட ஊழியர்கள் அவசிமாகும். ஒரு குறிப்பிட்ட விசேட திறன்கொண்டவர்கள் தேவைப்படும்போது, இவ்வாறானவர்கள் பரவலாக உள்ள பிரதேசத்தில் தொழிற்சாலையை அமைப்பதன் ஊடாக, உழைப்பாளர்கள் படையை பெறுவது இலகுவாக இருக்கும்.

## சந்தை வாய்ப்பு

தொழிற்துறையொன்றை ஒரு நிலைப்படுத்தும்போது, உற்பத்தியை சந்தைப்படுத்தும் சந்தை குறித்து தொழிற்துறையினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சந்தைக்கு அண்மையில் தொழிற்சாலை அமைவது உற்பத்திகளை சந்தைக்குத் துரித கதியில் விநியோகிக்க உதவும். அதேபோன்று, இலகுவில் பழுதடையக்கூடிய பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிற்துறை சந்தைக்கு அண்மையில் இருத்தல் நன்று. உதாரணமாக, பாண் உற்பத்தியைக் கூறமுடியும். பல உற்பத்திகள் இருக்கும் நிலையில் துரிதமாகவும் போட்டித் தன்மையுடனும் உற்பத்திகளை நுகர்வோருக்கு விநியோகிப்பதன் ஊடாக, சந்தையில் நன்மதிப்பைப் பெற வழிவகுக்கும். இது போட்டித்தன்மை மிக்க சந்தையில் தொழிற்துறையினரின் நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ள உதவும்.

## களஞ்சியசாலை வசதிகள்

நவீன உலகின் உற்பத்திச் செயற்பாட்டில் நிகழ்காலக் கேள்வி குறித்தும், எதிர்காலக் கேள்வி குறித்தும் கவனம் செலுதப்படுகின்றது. இதனூடாகப் பண்டங்களை பெரியளவில்உற்பத்தி செய்து, தேவையான சந்தர்ப்பங்களில் சந்தைக்கு விநியோகிக்கும் இலகு தன்மையைக் கருத்திற் கொண்டு தொகை அடிப்படையில் களஞ்சியப்படுத்தி வைத்தல் அவசியமாகும்.இதனால், தொழிற்துறை யொன்றினை நிலைப்படுத்துவதில் களஞ்சியசாலை வசதிக்கான வாய்ப்புகள் குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

## துறைமுக வசதி

உற்பத்திகள் தேசிய சந்தைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாதபோது, தொழிற்துறைக்காக இறக்குமதி மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களிலும் துறைமுக வசதிகள் நெருங்கிய இடத்தில் தொழிற்துறை இருத்தல் அவசியமாகும்.

## இலங்கையில் தொழிற்துறையை அமைத்தல்

இலங்கையில் தொழிற்துறையை நிலைப்படுத்துதல் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும்போது, பாரியளவிலான உற்பத்தி தொழிற்துறை நீண்ட காலமாக மேல் மாகாணப் பகுதிகளிலேயே அமைக்கப்பட்டிருந்தது. அதிலும் குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே இவை அமைக்கப்பட்டன.

பிற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மேல் மாகாணத்தில் அதிகளவு அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றமையே இதற்கு காரணமாகும். ஏற்றுமதித் தயாரிப்பு வலயமும் (கட்டுநாயக்க மற்றும் பியகம) மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. உற்பத்திக்கு இறக்குமதி மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழிற்துறைகளும் மேல் மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புடைய உற்பத்திகள் பெருந்தோட்டப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. வீட்டுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில்கள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப காலங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அதிகமுள்ள மேல்மாகாணத்தின் மீதே, அரசின் கவனம் இருந்தது. பின்னர் மேல் மாகாணம் தவிர, ஏனைய பகுதிகளில் கைத்தொழிற்துறைகள் அமைக்கப்பட்டன. இதன்படி, மூலப்பொருட்களை இலகுவில் பெறக்கூடிய பகுதிகள் தெரிவு செய்யப்பட்டன. இதன் பயனாக சீனித் தொழிற்சாலைகள் கந்தளாய், ஹிங்குரான, பெல்வத்த ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டன. பால் உற்பத்தித் தொழிற்துறை அம்பேவல, பொலன்னறுவை பகுதிகளிலும் கனிமங்கள் புல்மோட்டையிலும் சீமெந்து கங்கேசன் துறையிலும் புத்தளத்திலும் காலியிலும் அமைக்கப்பட்டன. ஏற்றுமதி சம்பந்தப்பட்டவை மேல்மாகாணத்திலேயே பிரதானமாக அமைக்கப்பட்டன.

## இலங்கையின் தொழிற்துறை வகைகள்

இலங்கையில் தொழிற்துறைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, மூலப்பொருட்களை அடிப்படையாகக்கொண்டே இந்த வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், ஏற்றுமதி சேவை என்ற அடிப்படையிலும் வகைப்படுத்தப்படுகின்றது. விவசாயத்தில் தேயிலை-பச்சைத் தேயிலை, இறப்பர்-டயர் டியூப், தேங்காய்-தேங்காய் எண்ணெய், கரும்பு-கருப்பட்டி, நெல்-அரிசி, மா என்பன உள்ளடங்கும். மாணிக்கம் அகழ்வில் மின்ரன் பென்சில், மாணிக்கம்-தங்க ஆபரணம், பொசுபேற்-பசளை என்பன அடங்கும். கனிம மண், இல்மனைட், சிலிக்கன், கண்ணாடி, பெல்ஸ்பார், மாபிள், பீங்கான், எப்படைட், உரக் கலவை, சுண்ணாம்புக் கற்கள்/ சீமெந்து என்பன கனிமப் பொருட்கள் தொழிற்துறையில் அடங்கும். ஏற்றுமதித் தொழில்களில் ஆடைத்தொழிற்துறை, விளையாட்டுப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், உணவு (பானம், காய்கறி) என்பனவும் சேவை தொழிற்துறையாக சுற்றுலா, போக்குவரத்து, தொடர்பாடல், வர்த்தகம் என்பனவும் அடங்கும்.

## பொருளாதாரத்தில் தொழிற்துறைகளின் பங்களிப்பு

1977 இல் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தத்தின்கீழ் இலங்கையில் தொழிற்துறை கொள்கையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன்படி, இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையை தழுவிக் கொண்டது. இதனால், புதிய தொழிற்துறைகள் பல உருவாக்கம் பெற்றன. இதனூடாக, தனியார் துறை முக்கியத்துவப்படுத்தப்பட்டது. 1978 இல் கொழும்பு பொருளாதார ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. இதன்கீழ் ஏற்றுமதியை ஊக்குவிக்க முதலீடுகளைக் கவர ஏற்றுமதி வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1978 இல் முதலாவது ஏற்றுமதி வலயமாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் அருகில் 200 ஹெக்டேயர் பிரதேசத்தில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் பியகம,கொக்கல, கண்டி ஆகிய பகுதிகளில் இவ்வாறான வலயங்கள் அமைக்கப்பட்டன. அத்துடன், அரச துறைகள் தனியார் மயப்படுத்தப்பட்டன.

1977களின் பின்னர் இலங்கையில் தொழிற்துறை கட்டமைப்புக்குள் காணப்படும் பிரதான துறையாக ஆடைத்தொழிற்துறை முன்னேற்றத்தினைக் குறிப்பிடலாம். 1980 இல் 10.5 வீதமாக இருந்த இத்துறையின் பங்களிப்பு 1997 இல் 41 சதவீதமாக உயர்வடைந்தது.

இத்தொழிற்துறையின் பொருளாதாரப் பங்களிப்பும் அதிகரித்துக் காணப்பட்டது. இதன்படி,1995 இல் விவசாயத்தைவிட அதிக பங்களிப்பு ஆடைத்தொழிற்துறையிலிருந்து கிடைத்தது. இலங்கையில் ஏற்றுமதி வருமானத்தில் தொழிற்துறைப் பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறு உள்ளது. 1977 இல் முழு ஏற்றுமதி வருமானத்தில் தொழிற்துறையின் பங்களிப்பு 14 சதவீதமாகும். 1980 மற்றும் 1987 இல் அது முறையே 35.2 வீதமாகவும் 49 வீதமாகவும் இருந்தது. 1997 இல் இது 74 சதவீதமாக உயர்வடைந்தது. எனினும், இலங்கை தொழிற்துறைகள் இறக்குமதி மூலப் பொருட்கள், உபகரணங்களிலேயே தங்கியுள்ளது.

தொழிற்துறை முன்னேற்றத்தினால் புதிய தொழில்வாய்ப்புகள் உருவாகியுள்ளன. குறிப்பாக, முதலீட்டு சபையின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்துறைகளில் பாரியளவு தொழில் வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன.

(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு:** சுயாட்சியுள்ள ஜனநாயகக் குடியரசு.

**அமைப்பு:** எகிப்து மற்றும் ஐக்கிய ராச்சியத்திடமிருந்து சுதந்திரம்-1956, ஜனவரி மாதம் முதலாம் திகதி; நிகழ்கால அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது-2005 ஜனவரி 9.

**தேசிய பெயர்:** ஜம்ஹுாரியா அஸ்-சூடான் (Republic of Sudan)

**ஜனாதிபதி**(1989): லெப்டினன் ஜெனரல் ஓமர் ஹசன் அஹமட் அல்-பஷீர்.

**முதலாம் துணை ஜனாதிபதி:** சர்வா கீர் மயார்டிட்.




# சூடான்

**இரண்டாம் துணை ஜனாதிபதி:** அலி ஒஸ்மான் தாஹா.

## புவியியல்



சூடான், வடகிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள, ஆபிரிக்கா கண்டத்திலேயே நிலப்பரப்பில் மிகப்பெரிய நாடாகும்.

சாட் மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகிய நாடுகள் இதன் மேற்கே அமைந்துள்ளன. இதன் வடக்கே எகிப்தும் லிபியாவும் அமைந்துள்ளன. எதியோப்பியாவும் எரிட்ரியாவும் சூடானின் கிழக்கே அமைந்துள்ளன. கென்யா, உகண்டா மற்றும் கொங்கோ ஜனநாயக குடியரசு ஆகிய நாடுகள் இதன் தெற்கு எல்லையில் அமைந்துள்ளன.

**நிலப்பரப்பு:** 917,374 ச.மைல் (23,76,011 ச.கி.மீ); **நிலப்பிரிவுகள்:** 26 மாநிலங்கள்.

**தலைநகரம்** (2003): கார்தூம்.

**மிகப்பெரிய நகரங்கள்:** ஓம்டர்மன், போர்ட் சூடான்; **உயர் மலைச்சிகரம்:** கின்யெட்டி (10,450 அடி).


கார்தூம் சர்வதேச விமான நிலையம்


சூடான் தேசிய நூதனசாலை


சூடான் பிரமிட்கள்

**மக்கள் தொகை** (2010): 41,980,182.

**நாணயம்:** டினார்.

**மொழிகள்:** அரேபிய மொழி (உத்தியோகபூர்வ மொழி), நியுபியன், டாபெடாவி,நிலோடிக, நைலோஹமிடிக், சூடானிய மொழிகள், ஆங்கிலம்.

**இனக்குழுவினர்கள்:** கறுப்பர் 52%, அரேபியர் 39%, பெஜா 6%, வெளிநாட்டினர் 2%, ஏனையோர் 1%.

**சமயங்கள்:** இஸ்லாம் (சுன்னி) 70%, உள்ளூர் நம்பிக்கைகள் 25%, கிறிஸ்தவம் 5% (பெரும்பாலும் தெற்கிலும் தலைநகர் கார்தூமிலும் வாழ்கின்றனர்)

**எழுத்தறிவு:** 61%.

**இணையத்தளக் குறியீடு:** .sd

**தொலைபேசிக் குறியிட்டு இலக்கம்:** 249

**தேசிய கீதம்**

We are the army of God and of our country,
We shall never fail when called to sacrifice
We challenge death during hard times,
We buy glory, at the dearest price…என ஆரம்பமாகின்றது.







## வரலாறு

தற்போதைய சூடானின் வட பகுதி புராதன காலத்தில் நியுபிய பேரரசின் கீழ் இருந்தது. கி.மு 2600 இற்குப் பின் எகிப்தியரின் ஆட்சியின் கீழ் வந்தது. 1500 களில் பல கறுப்பின ஆபிரிக்கக் குழுக்கள் இங்கு வந்து குடியேறினர். 1874 இல் எகிப்தியர்கள் மீண்டும் சூடானைக் கைப்பற்றினர். பிரித்தானியர் 1882 இல் எகிப்தைக் கைப்பற்றியதால் 1898 இல் சூடானையும் தம்முடன் இணைத்துக்கொண்டனர். அதன்பின், இப்பிரதேசம் 'ஆங்கிலோ-ஈஜிப்டியன் சூடான்' அதாவது 'ஆங்கில எகிப்திய சூடான்' என்ற பெயரில் 1898 முதல் 1955 வரை ஆட்சி செய்யப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டில் சூடானில் சூடானிய தேசியவாதம் வளர்ச்சியடைந்ததன் விளைவாக, 1953 இல் பிரித்தானிய அரசு சூடானில் சுயாட்சிக்கு வழிவிட்டது. 1956 ஜனவரி முதலாந்திகதி சூடானுக்கு தன்னாதிக்க சுதந்திரம் வழங்கப்பட்டது. 1983 இல் மேஜர் ஜெனரல் காபார் மொகமட் நிமெய்ரி சூடானில் இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்தினார்.


தலைநகரிலுள்ள ஜனாதிபதி மாளிகை

## காலநிலை

சூடானின் தென்பகுதி மிதமான காலநிலையைக் கொண்டுள்ளது. வடக்கே பாலைவனப் பகுதிகளில் ஏப்ரல் முதல் நொவெம்பர் மாதம் வரையிலான கடும் வெப்பமும் உலர் காலநிலையும் நிலவுகின்றது. நாட்டின் வட மற்றும் வடமேல் பகுதிக்கும் தெற்கு மற்றும் தென்மேல் பகுதிக்கு இடையே பாரிய காலநிலை வேறுபாடுகளைக் காணலாம். நாட்டில் காலநிலையில் அரேபிய குடாநாட்டிலிருந்து வீசும் உலர்ந்த வடகீழ் மேலைக் காற்று மற்றும் கொங்கோ நீரேந்துப் பிரதேசத்திலிருந்து வீசும் தென்மேல் மேலைக்காற்றின் தாக்கம் அதிகம் நிலவுகின்றது.


ஜனாதிபதி
முதலாம் துணை ஜனாதிபதி
இரண்டாம் துணை ஜனாதிபதி


தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்


தேசிய சின்னம்

## கலாசாரம்

சூடானின் கலாசாரம் பல்வேறு பண்புகள், பாரம்பரியங்கள், நடைமுறை நிகழ்வுகள், நம்பிக்கைகளின் அடிப்படையில் மாறுபட்ட 578 வகையான விழுமியங்களைக்கொண்டதாக காணப்படுகின்றது. சூடானில் மிகச் சிறந்த இசையானது மிகச் செழுமையானது. உலகப் புகழ்வாய்ந்தது மாகும். சூடான் நாடு மதரீதியில் பல்வேறு சமய நம்பிக்கைகளையும் கொண்டுள்ளது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 400,000 செல்லிடத் தொலைபேசிகள்: 20,000.

**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 12, FM 1, SW 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 3.



**இணையத்தள வழங்குனர்கள்** (2002): 2; **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 56,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்:** மொத்தம் 5,978 கி.மீ. **பெருந்தெருக்கள்:** 11,900 கி.மீ (இதில் செப்பனிடப்பட்டவை 4,320 கி.மீ; செப்பனிடப்படாதவை 7,580 கி.மீ). **நீர்வழிப் போக்குவரத்து:** 5,310 கி.மீ. **துறையும் துறைமுகமும்:** ஜுபா, கார்தூம், குஸ்டி, மலாக்கல், நிமுலி, போர்ட் சூடான், சவகின்.

**விமான நிலையங்கள்** (2002): 63.

## பொருளாதாரம்

**விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை** (பயிர்ச்செய்கை நிலம் 7%): பருத்தி, தானியங்கள், கரும்பு, வற்றாளை, ஆடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் ஏனைய கால்நடைகள். **தொழிலாளர் தொகை** (1998): 11 மில்லியன் (விவசாயம் 80%, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் 7%, அரசுத்துறை 13%). **வேலையற்றோர்** (2002): 18.7%. **பிரதான கைத்தொழில்கள்:** எண்ணெய், புடவை, சீமெந்து, சீனி, பாதணிகள், பெற்றோலிய சுத்திகரிப்பு. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இரும்புருக்கு, செம்பு, துத்தநாகம், வெள்ளி, தங்கம், நீர் மின்வலு. **ஏற்றுமதிகள்** (2009): உணவுப் பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள், புடவை வகைகள், கோதுமை. **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004) ஜப்பான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து, இந்தியா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா.


கார்தூம் பல்கலைக்கழகம்


கார்தூம் பிரதான பள்ளிவாசல்

## பிரசித்தி பெற்ற இடங்கள்

✱ சூடான் தேசிய நூதனசாலை ✱ கலீபா மாளிகை நூதனசாலை ✱ டின்டர் தேசிய வனவிலங்கியல் பூங்கா ✱ சூடான் பிரமிட்கள் ✱ சூடான் தாவரவியல் பூங்கா ✱ கமீசா சுற்றுலாக் கிராமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I

பெயர்: ................................................ நேரம்: 45 நிமிடங்கள்


**1 தொடக்கம் 34 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

01. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.





(1) A, D / B, C (2) A, C / B, D (3) D, C / A, B

02. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.





(1) A, B / C, D / E, F (2) A, D / B, E / C, F (3) A, C / B, E / D, F

03. இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து பயன்படுத்தக்கூடிய பகுதியைத் தெரிவு செய்க.




04. கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




05. □ = △△ எனின் △□ =? வெற்றிடத்திற்குப் (?) பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) □□ (2) △△ (3) △△△

★ **6 ஆம், 7 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தையும் கருத்தின் பழமொழியையும் நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.**

06. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'
   (1) விடாமுயற்சி பலன் தரும் (2) இளமையிற் கற்பதன் சிறப்பு
   (3) இளமைத் துணிவு

07. பலர் அறிந்த விடயத்தை மூடி மறைக்க முடியாது.
   (1) உலை வாயை மூடலாம்; ஊர் வாயை மூட முடியாது.
   (2) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
   (3) கெடுகுடி சொற் கேளாது.

★ **கீழே தரப்பட்ட சொற்களுக்குரிய குறியீடான இலக்கங்களை அவதானித்து 8 ஆம், 9 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

| கரம் = 123 | வரம் = 423 | அம்பு = 536 | அருவி = 578 |
|---|---|---|---|

08. அரவம் என்னும் சொல்லைக் குறியீடாக எழுதினால்;
   (1) 5243 (2) 5743 (3) 5832

09. கரும்பு என்னும் சொல்லைக் குறியீடாக எழுதினால்;
   (1) 1236 (2) 1736 (3) 1763

10. முதலில் உள்ள அடைப்பின் பெறுமதிக்குச் சமனான அடைப்பினைத் தெரிவு செய்க.
   36÷3 (1) 24÷3 (2) 4+8 (3) 6×6

11. 
இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கையைத் தெரிவு செய்க.
   (1) 6 (2) 2 (3) 8


★ **12 ஆம், 13 ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

12. 1. கிளி ஒரு பறவை. அது தாவரவுண்ணி.
   2. நாய் வீட்டைக் காக்கும் பிராணி. அது அனைத்தும் உண்ணி.
   3. நத்தை ஒரு பிராணி. அதற்குக் கால்கள் உண்டு.





13. (1) வெண்டிக்காய் ஒரு வகைக் காய்கறி. வெண்டி எமது நாட்டில் வளர்கிறது.
   (2) தென்னை ஒரு மரம். அது ஆணிவேர் உள்ள தாவரம்.
   (3) நீலோற்பலம் ஒரு பூவகை. அது இலங்கையின் தேசிய மலர்.

★ **14 ஆம், 15 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்கு (?) பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.**

14. 

(1) 20 (2) 34 (3) 21

15. 

(1) 34 (2) 26 (3) 29

★ **கீழ்வரும் கூற்றை வாசித்து 16 ஆம், 17 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

> அப்பாவினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 50 வருடங்கள் ஆகும். மகன் அப்பாவைவிட 30 வருடங்கள் இளையவன் எனின்;

16. தற்போது மகனின் வயது எத்தனை வருடங்கள்? (1) 20 (2) 10 (3) 30

17. தற்போது அப்பாவின் வயது எத்தனை வருடங்கள்? (1) 40 (2) 30 (3) 20

★ **18 ஆம், 19 ஆம் வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

18. சாந்தி, அக்காவுக்கு எழுதியிருந்த கடிதத்திற்கான ...................... இன்று கிடைத்தது.
   (1) பணம் (2) பதில் (3) கட்டுரை

19. ரைட் சகோதரர்கள் 'கிட்டி கொக்' என்ற இடத்திலிருந்தே உலகின் முதலாவது விமானத்தை ..........................ச் செய்தார்கள்.
   (1) ஓட (2) பறக்க (3) உயர

20. கஜன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது 100m ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும், அவனால் அந்த நிகழ்ச்சியில் வெற்றி பெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக்கூடியது;
   (1) விளையாட்டு மைதானம் வேறுபட்டமை
   (2) உணவு உண்ணாமல் பங்கு பற்றியமை
   (3) கஜனைவிட மிக வேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை

21. 400 இன் அரைவாசியின் 1/4 உடன் 10 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?
   (1) 50 (2) 60 (3) 40

22. 31 தொடக்கம் 36 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
   (1) 7 (2) 6 (3) 5

23. நான்கு வருடங்களுக்கு முன்னர் நவீனின் வயது 4 வருடங்களாகும். அப்போது அவனின் அம்மாவின் வயது அவனின் வயதைப் போல் ஐந்து மடங்காகும். தற்போது நவீனின் அம்மாவின் வயது நவீனின் வயதின் எத்தனை மடங்கு?
   (1) 5 மடங்கு (2) 4 மடங்கு (3) 3 மடங்கு

24. 36 உடன், அதன் அரைப்பங்கையும் அரைவாசியையும் ஒன்றையும் கூட்ட வரும் எண் யாது?
   (1) 63 (2) 64 (3) 100

★ **25 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்புபட்டவை. வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

லவனுக்கு தொலைக்காட்சி பார்க்க ஆசை. ஆனால் 25. ............................. [(1) அவர்களது (2) அவரது (3) அவனது] பெற்றோர் தொலைக்காட்சியைப் பார்க்க அனுமதிப்பதில்லை. அதனால், லவன் 26. ........................... [(1) வெட்கப்பட்டான் (2) வேதனைப்பட்டான் (3) படிக்கவில்லை] அவனது நண்பர்கள் தொலைக்காட்சியில் பார்த்த கார்ட்டூன் 27. ......................... [(1) சம்பவத்தைப் (2) பாடலைப் (3) நிகழ்ச்சிகளைப்] பற்றி மற்றைய நண்பர்களுடன் உரையாடும்போது லவனால் 28. ............................... [(1) தாங்க முடியவில்லை (2) நினைக்க முடியவில்லை (3) கேட்க முடியவில்லை] அவனின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் வெளிவரத் தொடங்கின.

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமாக வாழ சரியான முறைகளைப் பின்பற்றுங்கள்

**நாம் அன்றாடம் நடத்தல், உட்காருதல், நித்திரை செய்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். இவை குறித்து நாம் அதிக அக்கறை காட்டுவதில்லை. ஆனால், இந்த அனைத்து செயற்பாடுகளின் போதும் உடலினை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஏனெனில், எமது உடல் ஓர் அமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதால் தவறான நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் ஊடாக, உடலின் அமைப்பு முறை மாறிப் பல பிரச்சினைகள் உருவாகக்கூடும். அது உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம்**



## சரியான முறையில் நிற்றல்



சரியாக நிற்கும்போது எப்பொழுதும் உடலை சமநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். உடல் நிறை இரண்டு பாதங்களாலும் சமமாகத் தாங்கி நிற்குமாறு இருக்க வேண்டும். ஒருபுறத்திற்கு மாத்திரம் உடல்நிறையை சுமத்தியவாறு நிற்பதனால் முழங்கால் மூட்டு பாதிப்படையக்கூடும்.

## முறையான நடை

நடக்கும்போது, சரியான முறையினைக் கடைப்பிடித்தல் வேண்டும். நடத்தல் உடல் சமநிலையுடன் தொடர்பானதாகும். நடக்கும்போது, உடலை நேராக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பொருளைச் சுமந்துகொண்டு நடக்கும்போது, அந்தப் பொருளின் நிறை இரு கைகளுக்கும் சமமாகப் பகிர்ந்து செல்லக்கூடியவாறு இருத்தல் வேண்டும். ஒரு கையில் மட்டும் நிறையைத் தூக்கிச்செல்வது சீரத்தின் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

## உடலின் நெகிழ்வுத் தன்மை

சரியான உடற் செயற்பாட்டிற்கு உடல் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். இதற்கு உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும். உடல் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பின் உடலானது சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். எனவே, நாளாந்தம் அரை மணித்தியாலமேனும் உடல் களைப்படையும் வரை விளையாட்டுகளில் அல்லது உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது மிக அவசியமானதாகும்.

## சரியான முறையில் பாரம் தூக்குதல்

நிறையைத் தூக்கும்போது, உடலை முன்னால் வளைத்துத் தூக்குவது தவறானதாகும். தூக்கும் பொருள் எப்பொழுதும் உடலை அண்மித்ததாக இருக்க வேண்டும். எனவே, முழங்கால் மற்றும் தொடைப்பகுதி மடியும்படி குனிந்து இரு கைகளாலும் நிறையைத் தூக்குவதே சரியான முறையாகும்.



அவ்வாறே, உயரமான இடத்தில் இருக்கும் பொருளைத் தூக்கும்போது, அதனை விரல் நுனிகளால் தூக்கக்கூடாது. உயரத்திற்கு ஏற்றவாறு சமமாக நின்றவாறே அப்பொருளைத் தூக்க வேண்டும்.

## சரியான முறையில் நித்திரை செய்தல்

மெத்தையில் தூங்குவதையே அனைவரும் விரும்புவர். எனினும், இதனால் சிலருக்கு முதுகுவலி, கழுத்துவலி என்பன ஏற்படக்கூடும். எனவே, சமமான-சற்றுக் கடினமான மெத்தையில் நித்திரை செய்வது ஆரோக்கியமான, சுகமான நித்திரைக்கு வழிவகுக்கும். நித்திரை செய்யும் கட்டில் அதிக உயரமாக இருக்கக்கூடாது. இலகுவாக ஏறி இறங்கக்கூடியதாக அது அமைய வேண்டும். தனியொருவர் நித்திரை செய்யக்கூடிய கட்டில் 6 அடி நீளமும் $3^{1/2}$ அடி அகலத்தையும் கொண்டிருக்க வேண்டும். தமது உயரத்திற்கு ஏற்றதாக நீளமான கட்டில் இல்லாவிடின், உடல் உபாதைகள் ஏற்படக்கூடும். அத்துடன், இருபுறங்களிலும் அதிக பஞ்சும் நடுவில் குறைவான பஞ்சும் கொண்ட தலையணையைப் பயன்படுத்துவது சிறந்தது.

பல தலையணைகளை அடுக்கி வைத்துப் படுப்பதும் கழுத்தில் உபாதைகளைத் தோற்றுவிக்கும். அவ்வாறே, நீண்ட நேரம் ஒரே பக்கம் திரும்பி நித்திரை செய்வதும் சுளுக்கினை ஏற்படுத்தும். கழுத்தில் உள்ள Sternomastoid மற்றும் Trapezius ஆகிய தசைநார்கள் இழுபடுவதன் காரணமாகவே சுளுக்கு ஏற்படுகின்றது.



இதன்போது, இந்த தசை நார்கள் நீண்ட நேரம் அழுத்தப்படுவதனால் கழுத்தில் உபாதைகள் தோன்றுகின்றன.

கழுத்தில் சுளுக்குப் பிடிப்பு ஏற்பட்டவுடன் சிலர் மிக வேகமாகக் கழுத்தினை இரு மருங்கிலும் அசைக்க முற்படுவர். இதனால், வலி அதிகரிக்கக்கூடும். இதன்போது பிடிப்பு ஏற்பட்ட தசைநாரில் அழுத்தத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல் இதற்குச் சிறந்த நிவாரணமாகும். அதாவது, தலையின் சுமை கழுத்து தசைநார்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்காதவாறு தலையணை மீது தலையை வைத்துக் கொள்ள வேண்டும். சுளுக்கு ஏற்பட்ட முதல் இரண்டு தினங்களுக்கும் கழுத்தில் ஐஸ் கட்டிகளால் ஒத்தடம் கொடுப்பது சிறந்தது. மூன்று நாட்களுக்கு மேல் சுளுக்கு இருப்பின் மருத்துவரை நாடவும்.

## புத்தகப் பையை சுமந்து செல்லல்

புத்தகப் பையை ஒரு பக்கத் தோளில் மட்டும் காவிச் செல்வது நன்றன்று. இவ்வாறு நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக செய்வதனால் முதுகுப் பகுதியில் உபாதைகள் ஏற்படக்கூடும். தற்போது 'ஸ்கோலியோசிஸ்' எனும் உபாதை பாடசாலை செல்லும் பிள்ளைகள் மத்தியில் அதிகளவில் காணப்படுகின்றது. முள்ளந்தண்டு ஒருபுறம் வளைந்து செல்வதே இந்த நோயின் பிரதான அறிகுறியாகும். எடைகூடிய புத்தகப் பையினை ஒருபுறத் தோளில் மட்டும் சுமந்து செல்வதே இந்நோய் ஏற்படுவதற்கான காரணமாகும். ஆகவே, சமமான அளவில் இரு தோள்களுக்கும் நிறை பகிரப்படும் முறையிலேயே புத்தகப் பை சுமக்கப்படல் வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சரியான முறையில் நாற்காலியில் அமர்தல்

சரியான முறையில் அமர்வதற்கு நாற்காலி சரியான உயரத்தில் இருக்க வேண்டும். அமர்ந்தவுடன் முழங்கால்கள் சமமாக மடிக்கப்பட்டு பாதங்கள் சரியான அளவில் தரையில் படுதல் வேண்டும். அமரும்போது முதுகு, இடுப்பு பகுதிகள் நேராக சமநிலையில் இருக்க வேண்டும் (இங்கு பின்புறத்தின் 2/3 பகுதி நாற்காலியில் இருத்தல் வேண்டும்). நாற்காலியிலிருந்து எழும்பும்போது, நாற்காலியின் முனைக்குச் சென்று முதுகுப் பகுதியினை நேராக வைத்துக்கொண்டு எழும்ப வேண்டும்.

## நாற்காலியில் அமர்ந்து கற்றலில் ஈடுபடல்

நாற்காலியில் தமக்கு ஏற்றவிதத்தில் அமர்ந்திருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பிள்ளைகளின் பழக்கமாக இருக்கின்றது. எனினும், படிக்கும்போது நாற்காலியில் சரியான முறையில் அமர்ந்துதான் பாடங்களைப் படிக்க வேண்டும்.



புத்தகங்களை வாசிக்கும்போதும் எழுதும்போதும் தலையைக் குனிந்து கொண்டிருக்கக்கூடாது. மாறாக, புத்தகத்தினை மேசையின்மீது வைத்துக்கொண்டு கண் மட்டத்திற்கு ஏற்ப வாசிப்பதே சரியான முறையாகும். படுத்துக்கொண்டோ, சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டோ படிப்பது தவறான செயலாகும். முதுகினை வளைக்காமல் நேராக அமர்ந்துகொள்வதற்கு ஏற்றவாறு மேசையும் நாற்காலியும் அமைய வேண்டும். -(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைல் நதிக் கரையில் தே



**உலகின் பிரதான நாகரிகங்களிடையே நைல் நதி நாகரிகமும் ஒன்று. நைல் நதியும் நைல் பள்ளத்தாக்கும் அதனைச் சூழ்ந்த புராதன எகிப்தும் இந்த நாகரிகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் துணையாக அமைந்தன. நைல் நதியானது எகிப்தை ஊடறுத்துப் பாய்ந்திராவிட்டால், புராதன எகிப்து வெறும் பாலைவனமாகவோ அல்லது விவசாயம் செய்வதற்கும் மனித சமுதாயம் வாழ்வதற்கும் பொருத்தமற்ற ஒரு பிரதேசமாகவோ இருந்திருக்கும்**



நெஃபர்டிட அரசி - கி.மு 1364-1347 வரை ஆட்சி செய்த அக்ஹெனடன் மன்னரின் மனைவி

புராதன எகிப்திய மக்கள் குடிநீர் தேவைக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் நீரைப் பெறுவதற்கு நைல் நதியினையே நாடினர். வருடாந்தம் நைல் நதி பெருக்கெடுத்து ஓடும்பொழுது, கரைகளில் உள்ள மண்வளம் மென்மேலும் போசணை அடைந்து, செழிப்பான வளமான நிலமாக மாறியது. புராதன எகிப்திய விவசாயிகள் பாண் மற்றும் பியர் போன்றவற்றை உற்பத்தி செய்யும் நோக்கில் சோளம், பார்லி போன்ற பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டனர். இவற்றுடன் லினன் உற்பத்தி, மரக்கறி மற்றும் பழவகைகள் போன்ற பயிர்ச்செய்கைகளிலும் அதிக அக்கறை செலுத்தினர். கால்நடை வளர்ப்புகளிலும் ஈடுபட்டனர். புகழ்பெற்ற வரலாற்றின் தந்தை எனப் போற்றப்படும் கிரேக்க வரலாற்றாசிரியரான ஹெரடோட்டஸ் புராதன எகிப்தினை 'நைல் நதியில் தோன்றிய அற்புதம்' என்றே குறிப்பிடுகின்றார்.

## நைல் நதி

உலகின் பிரதான நதியான நைல் நதி ஏனைய நதிகளையும்விட, தனித்தன்மை வாய்ந்தது. எகிப்து நாட்டை இரண்டாகப் பிரித்து இந்த நதி ஓடுகிறது. மேற்பகுதி 'நைல் பள்ளத்தாக்கு' என்றும் கீழ்ப் பகுதி 'நைல் டெல்டா' என்றும் அழைக்கப்பட்டன.

## எகிப்தில் குடியேற்றங்கள்

புராதன எகிப்தில் ஆரம்பக் குடியேற்றம் இற்றைக்கு 7,000 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமாகியது. அங்கு உருவாக்கப்பட்ட சின்னஞ்சிறு குடியேற்றங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இரு ராசதானிகளாக உதயமாகின. அவற்றில் ஒன்று நைல் நதி கழிமுகத்தின் (டெல்டா) கீழே உருவாகியது. மற்றையது மேல் எகிப்தின் நைல் நதிப் பள்ளத்தாக்கில் உருவாகியது. கி.மு 3100 இல் மேல் எகிப்தின் ஆட்சியாளராக மெனிஸ் மன்னர் திகழ்ந்தார். இவர் இரு ராசதானிகளையும் ஒன்றிணைத்து தனது தலைநகரை மெம்பிஸ் எனும் இடத்தில் உருவாக்கினார். இதன் பின்னர்தான் புராதன எகிப்தில் எகிப்திய மன்னர்களின் வம்சம் உருவாகியது.

## ஹோரஸ்ஸின் ஆன்மா: பாராக்கள்

எகிப்திய மக்களிடையே, மிகவும் சக்தி வாய்ந்ததும் முக்கியத்துவம் மிக்கதுமான மனிதராக மன்னர் மதிக்கப்பட்டார்.மக்கள் மன்னரை வணக்கத்திற்குரியவராகக் கருதினர். காரணம், மன்னரை 'ஹோரஸ்' எனும் கடவுளின் மனித அவதாரமாக அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தனர். கி.மு 1554 ஆம் ஆண்டு வரை மன்னர் கௌரவமான பெயரில் அழைக்கப்பட்டார். 'பர்ஆ' என்பதுதான் அந்தக் கௌரவ நாமம். ஆங்கிலத்தில் 'பேரோ' என்று அழைக்கப்படுகின்றது. 'பர்ஆ' என்பதன் அர்த்தம் 'உன்னதமானவரின் மாளிகை' என்பதாகும்.

## அரச நிர்வாக நடவடிக்கைகள்

அரச பரிபாலன நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வரி அறவிடவும் 'வைசர்ஸ்' எனும் பெயரில் அழைக்கப்படும் அரச அதிகாரிகள் இருவரின் ஒத்துழைப்பு பாரா மன்னர்களுக்குக் கிடைத்தது. அத்துடன், நாடு 42 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாவட்டங்கள் 'நொம்ஸ்' என அழைக்கப்பட்டன. இவ்வனைத்து மாவட்டங்களும் பாரா மன்னர்களால் நியமிக்கப்பட்ட 'நொமார்க்ஸ்' எனும் பெயரில் அழைக்கப்படும் நிர்வாகிகளால் நிர்வகிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, அரச கஜானா எனும் திறைசேரி பரிபாலனத்திற்கும் அரச குடும்ப நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவும் பிரமிட் மற்றும் நினைவுச் சின்னங்களை அமைக்கும் நடவடிக்கைகளுக்காகவும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். விவசாய நடவடிக்கைகள், விலங்கு வேளாண்மை மாத்திரமல்ல; வெளிநாட்டுத் தொடர்புகள்கூட பாராக்களின் ஆட்சியின்கீழ் முன்னெடுக்கப்பட்டன. அரச வம்சத்தவர்களின்



மம்மியாக மாற்றும்போது உடல் உறுப்புகளை வைக்கும் பேழைகள்



நைல் நதிக்கரையை அண்டிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் சித்திரம்



எகிப்திய மக்கள் பிரமிட்டைக் கட்டுதல்



இரண்டா
இரண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தான்றிய நாகரிகம்



ஹவார்ட் காட்டர் துதன்காமனின் மம்மியைக் கண்டுபிடித்தபோது...



பாராக்களுக்காக அமைக்கப்பட்ட மாபெரும் கல்லறை பிரமிட்



துதன்காமனின் மம்மியாக்கப்பட்ட உடல் வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டி

தூய்மையைப் பாதுகாக்கும்பொருட்டு, அரச வம்ச திருமணங்கள் அனைத்தும் அரச குடும்பங்களிடையில் மாத்திரமே நடைபெற்றன.

## மரணத்தில் மலரும் ஆன்மா

புராதன எகிப்தியர்கள் 'மரணத்தில் மலரும் ஆன்மா' குறித்து ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். யாரேனும் ஒருவர் மரணித்த பின்னர், அந்நபரின் ஆன்மா 'டுஅட்' எனும் தளத்திற்குப் பயணிப்பதாக அவர்கள் நம்பினர். அடுத்த ஜென்மத்தில் சிறப்பான வாழ்க்கை வாழ சிறந்ததோர் உன்னதமான பிறப்பொன்றைப் பெறவேண்டுமாயின்;பல தடைகளைத் தாண்ட வேண்டிய தேவை அந்த ஆன்மாவுக்கு ஏற்படும். இந்தத் தடைகளில் மிகவும் கடினமான தடையை மரணத்தின் தேவனாகிய ஒசய்ரஸ்ஸின் மண்டபத்தில் அந்த ஆன்மா சந்திக்க நேரிடும். இங்கு அந்நபரின் இதயத்தின் நிறை இறகொன்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். அப்போது, பாவம் செய்தவரின் இதயம் அதிக எடை கொண்டதாக மாறும். அத்தகையோர் அங்கேயுள்ள மூர்க்கனுக்கு இரையாகும் வகையில் கையளிக்கப்படுவர். தூய்மையான, நல்ல வாழ்க்கை வாழ்ந்தவர்களாயின் அவர்கள் அடுத்த உலகிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். இத்தகைய உலகை 'மேற்கத்தேய ராசதானி' என அழைப்பர். ஒருவரின் ஆன்மா அடுத்த உலகத்திற்கு செல்லும் போது,அவரின் உடலும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என எகிப்தியர்கள் உறுதியாக நம்பினர். இதனாலேயே உடலை மம்மிகளாக நீண்ட நாட்களுக்குக் கெடாமல் பதப்படுத்திப் பாதுகாக்கும் முறை எகிப்தியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.



...ண்டாம் ரெம்சீஸஸ் மன்னரால் உருவாக்கப்பட்ட புகழ் பெற்ற அபுசிம்பல்.
இரண்டாம் ரெம்சீஸஸ் மன்னர் கி.மு 1289-1224 வரை ஆட்சி செய்தார்

## பிரமிட்கள்

எகிப்து என்றவுடன் நம் நினைவிற்கு வருபவை பிரமிட்கள் ஆகும். அடிப்பகுதி நீண்ட சதுர வடிவமாகவும் நான்கு சரிவான முக்கோணப் பகுதிகள் உச்சியில் இணையுமாறு இந்த பிரமிட்கள் கூம்பு வடிவில் அமைக்கப்பட்டிருக்கும்.அரசர்கள்,ராணிகள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோரின் இறந்த உடல்கள் மம்மிகளாக மாற்றப்பட்டு இங்கு வைக்கப்பட்டன.

## மம்மிகள்

மம்மி என்றால் 'பதப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படும் உடல்' என அர்த்தப்படுத்தலாம். உடல் உள் உறுப்புகளை அகற்றிவிட்டு, உடல் நன்கு உலர்த்தப்படும். பின்னர் மெழுகில் அமிழ்த்தி எடுத்து 'லினன்' துணிகளால் தலையிலிருந்து பாதம் வரை சுற்றிக்கட்டிப் பதப்படுத்தி பாதுகாக்கப்படும். 'Mumo' என்றால் மெழுகு எனப்படுகின்றது. அதனால்தான் இதற்கு 'மம்மி' என்று பெயர் வந்தது.

## துதன்காமன் கண்டுபிடிக்கப்பட்டமை

1922 ஆம் ஆண்டு நன்கு பாதுகாக்கப்பட்ட எகிப்திய கல்லறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கல்லறையானது புராதன எகிப்தில் ஆட்சி செய்த மிகவும் இளவயது மன்னராகிய துதன்காமனுடையது என பின்னர் தெரியவந்தது. பிரித்தானிய தொல்பொருள் ஆய்வாளரான ஹவர்ட் காட்டர் என்பவரால்தான் இந்தக் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. -(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமென்ற மனம்

ஓர் ஊரில் ஹரிசிங் எனும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். ஆனால், அவர் செல்வம் இருந்தும் திருப்தியுடன் வாழவில்லை. பேராசை கொண்ட அவர் மேலும் மேலும் செல்வம் சேர்க்கவே விரும்பினார். எப்போதும் பணம் சேர்க்கும் சிந்தனையால் நிம்மதியின்றித் தவித்தார்.

ஒருநாள் ஹரிசிங் இயற்கை அழகுமிக்க கிராமமொன்றிற்குச் சென்றார். செல்லும் வழியில் காய்கறித் தோட்டமொன்றில் விவசாயி ஒருவனைக் கண்டார். அந்த விவசாயி 'கிடைத்ததே போதும்' என்ற நிறைந்த உள்ளம் படைத்தவன். அவன் நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்து அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழும் இயல்புள்ளவன். அவன் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் வேளைகளில் மிக இனிமையான பாடல்களைப் பாடுவான். அந்தவகையில் அன்றும் அவன் தான் பராமரிக்கும் தோட்டத்தில் விளைந்த சோளத்தை எடுத்து நெருப்பில் வாட்டிக்கொண்டு இனிமையான பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டிருந்தான். அவன் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதைக் கண்ட ஹரிசிங் சிறிது நேரம் நின்று அவனை அவதானித்தார். இந்த விவசாயியை விட, எனக்குப் பெருஞ் செல்வம் இருந்தும் இவனுக்குள்ள மகிழ்ச்சியில் சிறிதளவுகூட எனக்கில்லையே. இதற்கு என்ன காரணம்? என்று யோசித்தான்.



பின்னர் விவசாயியை நெருங்கிய ஹரிசிங் அவனுடன் அன்போடு உரையாடத் தொடங்கினார். "நீ எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாய். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடுகிறாய். இது பற்றிச் சிறிதுகூடக் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் இருக்கிறாய். இது எப்படி உன்னால் முடிகிறது?" என வினவினார். ஹரிசிங்கின் கேள்வி விவசாயிக்குப் பெரு வியப்பை அளித்தது.எனினும், அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "ஐயா! இந்த நிலம் எனக்குச் சொந்தமானதல்ல. கூலிக்குத்தான் உழுகிறேன். இந்த நிலத்திலிருந்து எனக்கு நாளொன்றுக்கு இருநூறு ரூபாதான் கிடைக்கிறது. அதைக்கொண்டுதான் எனது வாழ்க்கையை நடத்துகிறேன். தர்மமும் செய்கிறேன். ஓரளவு சேமித்தும் வைத்திருக்கிறேன்.சேமித்து வைப்பது என் மகளுக்குக் கல்வி புகட்டுவதற்காகவே. நாள் தோறும் எனக்கு இந்தளவு ஊதியம் கிடைத்தாலே போதும். நான் குபேரன் ஆக வேண்டியதில்லை. கடன் எதுவும் இல்லாது நிம்மதியாக வாழ்ந்தாலே போதும். 'போதும் என்ற மனமே எனக்குப் பெருஞ்செல்வம்" என்று கூறினான். விவசாயியின் பதிலைக் கேட்டதும் ஹரிசிங், "உள்ளதே போதும் என்ற மனநிறைவு உண்டாகும் வரை தனக்கு மகிழ்ச்சி என்பது சிறிதளவும் உண்டாகாது" என்பதை உணர்ந்தார். இந்த விவசாயிக்கு உள்ள அறிவுகூட எனக்கு இல்லையே என்று மனம் நொந்தார். இதுவரை தேடிய செல்வமே எனக்குப் போதும். இனியாவது மன நிறைவுடன் வாழ்வேன் என்று தனக்குள் கூறிக் கொண்டார். பெருஞ் செல்வம் தேடி அலைவதை விட்டுவிட்டு நிம்மதியாக உள்ளதைக்கொண்டு வாழ்வதே சிறந்த வழியெனத் தீர்மானித்தார். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்னும் ஆன்றோர் வாக்கின் அருமையை உணர்ந்தார். மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார். அன்று முதல் அவர் நிம்மதியாக வாழ்ந்து வரலானார்.

எம்.இஸட்.எஃப்.ரனீஷா,
தரம் - 10,
மின்ஹாத் தே.பாட.,
திக்குவல்லை.




# கல்வியின் சிறப்பு



செல்வத்தில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அது ஈடு இணையில்லாதது. கெடுப்பதன்மூலம் அழிவில்லாதது. கல்வியை நெருப்பினாலோ, நீரினாலோ அழித்துவிட முடியாது. கள்வர்களால் கொள்ளை இடவும் முடியாது. கல்வியைத் தெளிவுடன் கற்கும்போது அறிவு, வளர்ச்சி பெறுகின்றது. அறிவு வளர்ச்சி ஏற்பட ஏற்பட மனிதன் நாளுக்கு நாள் நவீன நுட்பமுறைகளைக் கண்டுபிடிக்கிறான். புதிய சாதனைகளை நிலைநாட்டுகின்றான். அத்துடன், "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என ஔவையார் கூறியுள்ளார். அந்தவகையில் 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்பதும் கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.


கண்ணான இக்கல்வியை இளமையிலேயே நன்கு மனதில் கொண்டு கற்க வேண்டும். இளமையில் கற்கும் கல்வி நன்கு மனதில் பதியும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பர். கல்வியை சிறப்பாக கற்போமெனில் எத்தொழில் செய்யினும் சிறப்புடன் செய்து மேன்மை அடையலாம். எனவே, இளமையில் நாம் கல்விச் செல்வதைப் பெற்று சிறப்புடன் வாழ்வோமாக.



ட.கிஷோக், தரம் - 8,
இந்துக் கல்லூரி, கொழும்பு-04.

# உங்களுக்குத் தெரியுமா?

## மரணப்பள்ளத்தாக்கு



கலிபோர்னியாவில் இன்யோ எனுமிடத்தில் ஆழமானதோர் பள்ளம் உள்ளது. இது கடல் மட்டத்தைவிட 85m ஆழமானது. இது 'மரணப்பள்ளத்தாக்கு' எனப்படும். ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற தங்க வேட்டையின் போது, இப்பள்ளத்தாக்கைக் கடக்க முயன்ற பலர் மரணமடைந்தனர். இப்பள்ளத்தாக்கின் இடையே தேங்கியுள்ள நீர் மிகவும் உவர்ப்பானது. இதனால், இப்பகுதிகளில் சிறு புல் கூட முளைப்பதில்லை. காலப்போக்கில் இதன் மேல் பாலம் ஒன்றை அமைத்தபோது, பல்லாயிரக்கணக்கான மிருகங்களின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனாலேயே இது 'மரணப்பள்ளத் தாக்கு' எனப் பெயர் பெற்றது.

## நட்சத்திர மீன்



நட்சத்திர மீன் ஒன்றின் ஐந்து கரங்களும் இறுகப் பற்றக்கூடிய வகையில் நூற்றுக்கணக்கான மயிர்ப்பீலி உறிஞ்சிகளைக் கொண்டிருக்கும். இம்மீன்கள் நிமிடமொன்றிற்கு 2 அங்குலம் வரையிலான வேகத்தில் நகரக்கூடியன. இந்த நட்சத்திர மீனின் கரம் ஒன்று துண்டிக்கப்பட்டால் மிக விரைவில் வளர்ந்துவிடும் இயல்புடையது. அத்துடன், துண்டிக்கப்பட்ட கரத்துண்டும் தனியானதொரு நட்சத்திர மீனாக மாறி விடும்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.

# தெய்வப்புலவர் திருவள்ளுவர்



திருவள்ளுவர் பலநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் வாழ்ந்துள்ளார். அவருக்குத் தெய்வப்புலவர், பொய்யாமொழிப் புலவர் என்றெல்லாம் பல பெயர்கள் உள்ளன. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' எனப் பாடினார் பாரதியார். வள்ளுவரால் தமிழ்நாடு வான் புகழ் கொண்டு விளங்குகிறது. வள்ளுவன் தந்த தமிழ் மறையே அவனுக்கு வான் புகழைத் தேடித் தந்தது.

திருவள்ளுவர் உலகம் போற்றும் ஒப்பற்ற புலவர். அவர் அருளிய திருக்குறள் உலகப் பொதுமறையாக விளங்குகிறது. வையத்துள் வாழ் வாங்கு வாழும் நெறியுரைக்கும் இந்நூல் உலகமொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் சகல ஞானமும் தெளிந்த ஞானி, பேரறிஞர். அவரைப் பற்றிப் பேசாத புலவரில்லை. எழுதாத அறிஞரில்லை. எல்லாப் பருவத்தினருக்கும் எக்காலத்துக்கும் பயன்படத் தக்க உண்மைகளை வள்ளுவர் நமக்குத் தந்துள்ளார். அவர் தந்த 1,330 குறட்பாக்களையும் கற்று, ஒழுகுதலே நம் தலையாய கடமையாகும்.

எம்.வை.சக்கரியா
மொஹம்மட்,
தரம் - 9,
ஸாஹிரா தே.பாட.,
மாத்தளை.

# இருவகைப் பழக்கங்கள்

பழக்கம் என்பது நல்லவை, தீயவை என இரு வகைப்படும். நல்ல பழக்கங்கள் நன்மைகளைத் தரும். தீய பழக்கங்கள் தீமைகளைத் தரும். உண்மை பேசுதல், பெரியோரை மதித்தல், பிறருக்கு உதவி செய்தல் போன்றவை நல்ல பழக்கங்கள் எனவும் புகைபிடித்தல், பல் துலக்காமல் காலையில் தேநீர் அருந்துதல், கண்டகண்ட இடங்களில் எச்சில் துப்புதல், சண்டையிடுதல், வீண்வார்த்தைகள் பேசுதல் போன்றவை தீய பழக்கங்களில் அடங்கும்.

அதனால், எப்போதும் நாம் நல்ல எண்ணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். நல்லவற்றையே சிந்தித்தல் வேண்டும். எதற்கெடுத்தாலும் பயப்படுதல், பதற்றப்படுதல் என்பனவும் கூடாது.

ஜி.தனேஸ்குமார்,
ப/தம்பேத்தன்னை இல.1 த.க.வித்., அப்புத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியர்வை ஏற்படுவதால் உள்ள நன்மைகள்

நமது உடல் ஓர் உலைச்சூளை போன்று செயற்படுகின்றது. நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் உடலில் எரிபொருட்களாகச் செயற்படுகின்றன. 'வளர்சிதை' மாற்றத்தினால் அந்த உணவுப் பொருட்கள்



உடலுக்கு வெப்பசக்தியைக் (Heat Energy) கொடுக்கின்றது. இதன்மூலம் சுமார் 2,500 கலோரி வெப்பம் ஒவ்வொரு நாளும் உடலில் உண்டாக்கப்படுகின்றது. அந்தவகையில் உடலில் வெப்பம் எப்படி நிலைப்படுத்தப்படுகின்றது என்பதைப் பார்ப்போம்.



நமது உடலில் சில 'வளர்சிதை' மாற்றங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அச்செயல்கள் உடலின் வெப்பநிலையை $98.4^{0}$F க்கு மேல் அதிகரிக்க விடாது கட்டுப்படுத்துகின்றன. இக்கட்டுப்படுத்தும் செயல்களில் ஒன்று வியர்வை வெளிப்படுவதாகும். இதன்மூலம் உடலின் வெப்பம் நிலைப்படுத்தப்படுகின்றது.

மேலும் உடலின் வெப்பத்தை, மூளையிலுள்ள வெப்பத்தை நிலைப்படுத்தும் மையமும் (Temperature Centre) நிலைப்படுத்துகின்றது. இம்மையம் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அதாவது, நிலைப்படுத்தும் மையம் (Control Centre), வெப்பப்படுத்தும் மையம் (Heating Centre) மற்றும் குளிர்ச்சிப்படுத்தும் மையம் (Cooling Centre) என்பனவாகும்.

சில செயல்களினால், குருதியின் வெப்பநிலை சாதாரண வெப்பநிலையிலிருந்து குறைவடையும்போது, மூளையில் வெப்பப்படுத்தும் மையம் உடனே செயற்பட ஆரம்பிக்கின்றது. அப்பொழுது சில விசேட சுரப்பிகள், எளிதில் எரியக்கூடிய ரசாயனப் பொருட்கள் சிலவற்றை வழங்குகின்றன. நம் உடலில் உள்ள தசைகள் மற்றும் கல்லீரல் (Liver) என்பன இப்பொருட்களை எடுத்துச் செயற்பட்டு உடலின் உள் வெப்பத்தை உயர்த்திப் பழைய நிலைக்குக் கொண்டு வருகின்றன.

காலநிலை மற்றும் வேறு காரணங்களினால் நம் உடலின் வெப்பநிலை உயரும் சந்தர்ப்பங்களில் குளிர்ச்சி மையம் செயற்பட்டு 'வளர்சிதை' மாற்ற அளவைக் குறைக்கின்றது. இதனால், வியர்வையுடன்



கழிவுநீர், யூரியா மற்றும் உப்புகளும் வெளியேறுகின்றன. அப்போது, உடலின் வெப்பத்தினால் வியர்வை ஆவியாக மாறுகின்றது. இச்செயலினால் உடல் குளிர்ச்சியடைகின்றது. இச்செயல் கோடைகாலத்தில் மட்பாண்டத்தில் நீர் குளிர்ச்சியடைவதை ஒத்துள்ளது. அத்துடன், ஆவியாதல் என்பது எப்பொழுதும் குளிர்ச்சியை உண்டாக்குகின்றது. இவற்றில் உடலின் வெப்பத்தை நிலைப்படுத்துவதில் வியர்வை உண்டாதல் ஒரு முக்கியமான செயற்பாடாகும். அத்தோடு, வியர்வையானது உள்ளுறுப்புகளைச் சுத்தப்படுத்துவதுடன், தோலில் உள்ள மயிர்த்துளைக்குழாய் வழியாக, உடலுக்குத் தீமை தரும் பொருட்களையும் வெளியேற்றுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்

## உலக அமைதிக்கான உழைப்பு



சாரணியர் அமைப்பின் கொழும்பு நிறுவனமான தேவி பாலிகா வித்தியாலயத்தின் வளவில் நடைபெற்ற 30 ஆவது வருடாந்த முகாமின்போது, பொறுப்பாளர் மங்கலிகா குணரட்ணவுடன் சாரணியர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.



களனி ரஜமஹாவிகாரையில் நடைபெற்ற 'ருக் ரோப்பனா' நிகழ்வின் போது, சாரணியர்கள் தமது தலைவி நந்தா தேவகிரியுடன் சுற்றாடலைப் பாதுகாப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.






ஐக்கிய நாடுகள் தினம் தேவி பாலிகா வித்தியாலய கொழும்பு சாரணிய அமைப்பின் முதல்தர சாரணியர்களால் சாரணியத் தலைவிகளான புஷ்பா பெரேரா, லக்ஸ்மி குணரட்ன, நந்தா தேவகிரி ஆகியோரின் வழிகாட்டலில் கொண்டாடப்பட்டது.



ரோயல் இன்ஸ்டிடியூட்டின் குட்டி நண்பிகள் பிரிவைச் சேர்ந்த குட்டி நண்பி தொஷானி விக்னேஸ்வரம் மேற்படி பாடசாலையில் நடைபெற்ற தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது, பரதநாட்டியம் வழங்கி அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தினார்.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3933

எம்.முஆத்,
தரம் - 2,
அல்-பலாஹ் மு.ம.வித்.,
போருதொட்ட.


அங்.இல: 3934

அகற்ரா குணா,
தரம் - 5,
கார்மேல் பற்றிமா கல்.,
கல்முனை.


அங்.இல: 3935

மேர்வின் டில்சான்,
தரம் - 5,
புனித அந்தோனியார் கல்., கண்டி.


அங்.இல: 3936

பாத்திமா ஸேபா,
தரம் - 6,
அஸ்ஹர் வித்.,
மட்டக்களப்பு.


அங்.இல: 3937

எஃப்.ஹஃப்ஸா,
தரம் - 6,
தும்புலுவாவ மு.வித்.,
மாவனல்லை.


அங்.இல: 3938

ஜே.றம்மியா,
தரம் - 7,
மடுக்கரை அ.த.க.பா.,
மன்னார்.


அங்.இல: 3939

முகமட் சஜீட்,
தரம் - 7,
ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி.


அங்.இல: 3940

ஜெ.பிரதீசன்,
தரம் - 11,
வேலாயுதம் ம.வித்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3941

நெ.ஹசன்,
தரம் - 8,
ஜோன்ஸ் கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3942

ச.திர்சாள்,
தரம் - 11,
பூந்தோட்டம் ம.வித்.,
வவுனியா.


அங்.இல: 3943

ஜெ.ஜெகபாலினி,
தரம் - 10,
யாழ்.இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3944

எம்.அஃப்றாஸ்,
தரம் - 11,
உளுக்கப்பள்ளம் மு.ம.வித்., புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சியை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வம் பார்வையிடுவதையும் மாணவர் ஒருவர் தனது புத்தாக்கம் பற்றி விளக்கமளிப்பதையும் காட்சிப்படுத்தப்பட்ட சிறுவர் ஓவியங்களில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். *(தகவல் : கே.ஏ.அலீம்-கண்டி கல்விப் பணிமனை)*

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கும்பலங்க-பாடசாலை வீதியைச் சேர்ந்த எம்.ஐ.அஸ்ரிப், 30.12.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறையருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



அநுராதபுரம்-அளுத்கமையைச் சேர்ந்த றாசிக்-பஸ்லியா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹமட் றிளா, 31.12.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.




அஹதியதுல் தாருஸ்ஸலாமின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா கொழும்பு எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றபோது, மேல் மாகாண சபை உறுப்பினர் அஜ்மல் மவ்ஜூத் அஹதியதுல் தாருஸ்ஸலாமின் அதிபர் ஸனீர் மஹ்ஃபாலிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.


## ஓவியம் வரைவோம் - 32

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

கடந்த வார ஓவியப் பாடத்தில் ஓவியம் ஒன்றை வரையும்போது, இடம்பெற வேண்டிய பண்புகள் சிலவற்றை நோக்கினோம். இந்த இதழில் அதன் தொடர்ச்சி இடம்பெறுகின்றது.



சமநிலையும் சரியான படவமைப்பும் இல்லாதவை



சமநிலைப்படம்

**5. தொழில்நுட்பம்:** தொழில்நுட்பம் எனும்போது, ஓவியம் வரைபவரின் கற்பனைத்திறன், செயற்றிறன் என்பனவற்றோடு, வித்தியாசமாகக் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கையாண்டு உயிர்த்துடிப்புள்ள ஓவியத்தை அமைப்பதை அது குறிப்பதாக அமையும். அத்துடன், வர்ணங்களைத் தெளித்தல், தூரிகைகளைப் பலவாறு பயன்படுத்தல், மெழுகு-நீர்வர்ணங்களைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தல், வர்ண-வெள்ளைக் கடதாசி, கடதாசித் துண்டுகள் போன்றவற்றைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தி உயிர்த்துடிப்புள்ள ஓவியமொன்றை வரைவதானது ஒவ்வொருவரும் கையாளும் தொழில்நுட்பத்தைப் பொறுத்து அமைகின்றது.

**6. அளவு:** ஓர் ஓவியத்தில் வரையும் (இடம்பெறும்) உருவங்களின் விகிதப் பொருத்தங்கள் தூரதரிசனங்களின் அடிப்படையில் உருவங்கள் ஒன்றையொன்று மறைத்து நிற்கும். இங்கு கண்மட்ட அளவுகள் அதாவது, மேல்-கீழ் அளவுகள், உண்மையான உருவத்தின் அளவுகள் போன்றவை சரியான விகித அடிப்படையில் பேணப்பட வேண்டும்.


**7. உருவங்களின் ஒத்ததன்மை:** உருவங்கள் அல்லது வடிவங்களின் அமைப்பு ரேகைகளின் தன்மைகளால் ஒன்றுக்கொன்று பொருத்தமானதாக அமைதல் வேண்டும். அதாவது, கணித அளவுகளுக்கேற்ப, சரியாக இல்லாவிட்டாலும் ரேகைகளின் அளவுகள், வளைவுகள், நேர்த்தன்மைகள், பருமன் என்பன ஓரளவுக்கு ஏற்ற விதத்தில் அமைதல் வேண்டும்.

**8. கருத்து வெளிப்பாடு:** ஓர் ஓவியம் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் வரையப்பட்டால், அக்கருத்து உரியமுறையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். அக்கருத்தை வெளிப்படுத்தக்கூடியவாறு அமைப்பு, ஒத்திசைவு, சமநிலைப் பரிமாணம், வர்ணங்கள், பின்னணி, வெற்றிடங்கள் போன்ற அம்சங்கள் பேணப்பட்டுக் கருத்தை வெளிக்காட்டக்கூடியதாக அமைந்தால்தான் அந்த ஓவியத்தின் கருத்து வெளிப்பாடு சிறப்பாக அமையும். அத்துடன், ஓர் ஓவியத்தின் சிறப்புத்தன்மைக்கு கருத்து வெளிப்பாடு என்பது மிக முக்கியமான விடயமாகும். **(தொடரும்)**

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி: கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு



மு.அஸ்லம், தரம் - 10, சாதுலியா வித்., வாழைச்சேனை.



வ.கஜமோகன், தரம் - 11, கோணாவில் விநாயகர் ம.வித்., திருகோணமலை.




ஆ.கவிராஜ், தரம் - 10, வித்தியானந்தாக் கல்., முல்லைத்தீவு.



ஏ.சஜாத் அலானா, தரம் - 10, அல்-மனார் மத்.கல்., மருதமுனை.



எஃப்.பர்ஹானா, தரம் - 7, அல்-அஸ்ஹர் மத்.கல்., தெஹியங்க.



டி.நித்தியராசன், தரம் - 8, ஒட்டுசுட்டான் ம.வித்., ஒட்டுசுட்டான்.



எஃப்.அம்ரா, தரம் - 5, சாஹிராக் கல்., கம்பளை.




எஸ்.துஷ்யந்தன், தரம் - 9, புனித போர்ணதேத் கல்., சிலாபம்.



எஃப்.நஜ்மா, தரம் - 7, அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.



பா.ரசிக்கா, தரம் - 6, மலைமகள் இ.மத்.கல்., கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகள் தந்த பாடம்

அந்த ஊரில் மிகப்பெரிய செல்வந்தர் முருகேசன், அவருக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் பெயர் ரவி, இளையவன் பெயர் கவி. இருவரும் ஒரே பாடசாலையில் ஆறாம் வகுப்பிலும் நான்காம் வகுப்பிலும் படித்து வந்தனர்.

இருவரும் பாடசாலைக்குப் புறப்படும்பொழுது கைச்செலவிற்கெனத் தினமும் ஆளுக்கு ஐந்து ரூபா கொடுப்பது முருகேசனின் வழக்கம்.

ஆனால், ரவி, அப்பா தரும் பணம் முழுவதையும் செலவு செய்யமாட்டான். ஒன்றிரண்டு ரூபா செலவு செய்துவிட்டு, மீதிப்பணத்தைச் சேமித்து வைப்பான். ஆனால், கவியோ பணம் முழுவதையும் அன்றே செலவழித்துத் தீர்த்து விடுவான்.



இது தவறென்று ரவி பலமுறை எடுத்துச் சொல்லியும் கவி அதை அலட்சியப்படுத்திப் பேசியதுடன், "அப்பா எதற்காகத் தினமும் ஐந்து ரூபா தருகிறார்? நன்றாகச் செலவு செய்ய வேண்டும் என்பதற்குத்தானே.... அவ்வாறு இல்லாமல் சேமித்து வைப்பதால் என்ன சுகம் கிடைக்கப் போகிறதோ, புரியவில்லை" என்று பதில் அளிப்பான்.

அதைக்கேட்கும் ரவி பெரிதும் வருத்தம் அடைவான். எப்படியேனும் கவியைத் திருத்த ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று மனதிற்குள் நினைத்துக் கொள்வான்.

நாட்கள் சென்றன. ஒருநாள் இருவரும் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது, வழியில் எறும்புப் புற்று ஒன்றைக் கண்டனர். அப்புற்றை நோக்கி எறும்புகள் சாரை சாரையாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தன. ஒவ்வொரு எறும்பும் நெல், அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை என்று ஏதேனும் ஓர் உணவுப் பொருளை வாயில் கவ்விக்கொண்டு மிகுந்த சிரமத்துடன் சென்று கொண்டிருந்தன.

இதைப் பார்த்த கவிக்கு வியப்பு ஏற்பட்டது. ரவியிடம், "இதோ பாருங்கள் அண்ணா, இந்த எறும்புகள் எதற்காக இவ்வளவு சிரமப்பட்டுத் தானியங்களையும் சர்க்கரைகளையும் தூக்கிக் கொண்டு செல்கின்றன?" என்று கேட்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தம்பிக்கு சேமிப்பின் அவசியத்தை உணர்த்த விரும்பிய ரவி, "தம்பி, இது கோடைகாலம். இன்னும் சில நாட்களில் மழைக்காலம் தொடங்கிவிடும். அப்போது, எறும்புகள் தங்களுக்கு வேண்டிய உணவைத் தேட முடியாது. ஆகவே, மழைக்காலத்துக்குத் தேவையான உணவை முன்கூட்டியே புற்றில் சேமித்து வைக்கவே இப்படிச் சிரமப்படுகின்றன" என்று விளக்கினான்.

அதைக்கேட்ட கவியின் மனதில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. மிகச்சிறிய உயிர்களான எறும்புகளே சேமிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கும்போது, ஆறறிவு படைத்த நான் அப்பா தரும் பணத்தை அன்றே செலவு செய்துவிடுவது தவறு என்ற உண்மையை உணர்ந்தான்.

ரவியைப் பார்த்து "அண்ணா, இனி நானும் உங்களைப்போல தினமும் சேமிப்பேன்" என்று உறுதியுடன் கூறினான். கவி திருந்திவிட்டதை எண்ணி பெரிதும் மகிழ்ந்தான் ரவி.




அரியாலையூர் சி.சிவதாசன்

அந்த இருளிலும் வேப்பங்கேணியில் பாரிய வேப்பமரங்கள் பெரிய மலைகளைப் போலக் காட்சியளித்தன. ஒரு கையில் தடியொன்றும் மறு கையில் 'டோர்ச்' லைற்றுமாக, அந்த இளைஞன் வேப்பமரப்பகுதியை நோக்கி நடந்தான். அஞ்சாநெஞ்சமும் எதனையும் எதிர்கொள்ளும் துணிச்சலும் கொண்ட வீரனைப் போல் கம்பீரமாக அவன் காட்சியளித்தான்

## பேய்க்குப் பலியான இளைஞன்?

இளைஞன் சின்னக்கிளி ஐயரைப் பார்த்து "நீங்கள் பேயை நேரே கண்டீர்களா? இக்கிராம மக்கள் வேப்ப மரத்தடியில் பேய் இருப்பதாகச் சொல்கிறார்களே தவிர, அதன் உண்மை என்னவென்பதை யாரும் அறிந்து கொள்ள முற்படவில்லை. துணிவுள்ள இளைஞர்களையும் அங்கு சென்று என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள அனுமதிக்கவுமில்லை" என்று கவலையுடன் கூறினான். அவன் அவ்வாறு ஆவேசத்துடன் கூறியது ஐயருக்கும் கோபத்தை ஏற்படுத்தியது.

"சரி, உனக்குத் துணிவிருந்தால், பேய் இல்லை என்று நீ நம்பினால் வேப்பங்கேணியடியில் வேப்பமரத்திற்கு அருகில் நான் விட்டு விட்டு வந்த மாட்டு வண்டியை மீட்டுவர முடியுமா?" என்று கேட்டார். யாரிடம் இருந்தும் பதில் கிடைக்கவில்லை. ஆனால், அந்த இளைஞன் மட்டும் அங்கு போக முற்பட்டான். அப்பொழுது அந்த இளைஞனின் தாய், தந்தை இருவரும் அவனை நோக்கி "அங்கே நீ போக வேண்டாம்" என்று தடுத்தார்கள். அவன் அவர்கள் சொல்லைக் கேட்பதாக இல்லை.

"உனக்கு என்ன பைத்தியமா? பேய் இல்லை என்கிறாய்? கடந்த நாட்களில் இங்கு நடந்தவற்றை மறந்துவிட்டாயா? முட்டாள்தனமாக நடக்க முற்படாதே. பெரியவர்கள் சொல்வதைக் கேள்" என்று இளைஞனின் தந்தை கூறினார். தந்தையின் சொல்லைக் கேட்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. "என்ன நடக்கிறது என்று பார்த்து வருகிறேன். ஐயரின் மாட்டுவண்டியை மீட்டு வருகிறேன்" என்று கூறி வேப்பங்கேணியடியை நோக்கிப் புறப்பட்டான். அந்த இருளிலும் வேப்பங்கேணியில் பாரிய வேப்பமரங்கள் பெரிய மலைகளைப் போலக் காட்சியளித்தன. ஒரு கையில் தடியொன்றும் மறு கையில் 'டோர்ச்' லைற்றுமாக, அந்த இளைஞன் வேப்ப மரப்பகுதியை நோக்கி நடந்தான். அஞ்சா நெஞ்சமும் எதனையும் எதிர்கொள்ளும் துணிச்சலும் கொண்ட வீரனைப் போல் கம்பீரமாக அவன் காட்சியளித்தான்.

ஐயரின் வண்டியைத் தேடிப் பிடிப்பதே அவனின் நோக்கமாக இருந்தது. கரடுமுரடான மண் பாதையில் முன்னேறிச் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருகணம் அசந்தே போய் விட்டான். அப்போது பாதையின் நடுவில் பெருநெருப்பு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த இடத்தை அவன் நெருங்கிய பொழுது "கீச்! கீச்!" என்ற சத்தத்தோடு ஏதோவொன்று அவன் தோளில் உரசிச் சென்றது. அது மீண்டும் திரும்பி அவ்விளைஞன் மீது உரசியது. அவன் மீது உரசியது வெளவால் என்பதை அவன் தெரிந்து கொண்டான்.

"இதைத்தான் சின்னக்கிளி ஐயர் கறுத்த உருவம் தன்னைத் துரத்தியது என்று கூறினாரோ? இருக்கலாம். அவர் பயத்தின் காரணமாக, அப்படி எண்ணியிருக்கலாம்" என்று அவன் நினைத்துக்கொண்டான். அப்படியானால் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு என்னவாக இருக்கும்?" எனச் சிந்தித்தவன் அதனை உற்று நோக்கினான். அந்த நெருப்பில் ஐயரின் மாட்டுவண்டில் எரிந்துகொண்டிருந்தது. வண்டில் எரிகிறது என்றால் மாடு எங்கே? மாடு தப்பி ஓடியிருக்க வேண்டும். எரியும் வண்டியில் மாடு அகப்பட்டுக் கொண்டதற்கு எதுவித அடையாளமும் தெரியவில்லை. யார் வண்டிலுக்குத் தீ வைத்திருப்பார்கள் என அறியும் நோக்குடன் அவ்விடத்தை நோட்டமிட்டான் இளைஞன்.



அப்பொழுது காது செவிடாகும்படியாக பயங்கரச் சத்தமொன்று எங்கிருந்தோ கேட்டது. இளைஞன் திடுக்கிட்டான். வேப்பமரத்தடிப் பக்கம் அவன் கண்கள் அவனை அறியாமலேயே நோக்கின.

"வேப்பமரம்! ஐயர் சொன்ன அதே இடம். காளியம்மன் சிலைக்கு மிக அண்மையிலுள்ள வேப்பமரம்" என அவன் வாய் முணுமுணுத்தது. காளி அம்மன் சிலையைப் பார்த்தான் அந்த இளைஞன். அங்கே எதுவித மாற்றமும் தென்படவில்லை. எனினும், அவன் அஞ்சவில்லை. வருவது வரட்டும் என்ற துணிவுடன் வேப்ப மரத்தை நோக்கிச் சென்றான். அப்பொழுது வேப்பமரத்தின் அடிப் பாகத்தில் தீப்பிழம்புகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. தீப் பிழம்புகள் குபீர் குபீரெனத் தோன்றி மறைந்தது. அது அவனுக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது.

அப்பொழுது அந்தத் தீப்பிழம்பின் வெளிச்சத்தில் சின்னக்கிளி ஐயர் கூறியது போல் விகாரமான உருவம் ஒன்று காற்றில் மிதப்பது போல் தென்பட்டது. அந்த இளைஞனின் துணியெல்லாம் பறந்தது. நெஞ்சு 'பக் பக்' என வேகமாக அடித்தது. உடல் வியர்வையால் நனைந்தது. "சந்தேகமேயில்லை. இது சின்னக்கிளி ஐயர் சொன்ன போய்தான். பேயேதான்" அவன் வாய் முணுமுணுக்க அந்நேரம் அந்த விகாரமான உருவம் அவ்விளைஞனை நெருங்கி மிக விரைவாக வந்து கொண்டிருந்தது. அவன் செய்வதறியாது திகைத்தான். அவனை அறியாமல் அவன் "ஐயோ! பேய்! என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்" எனச் சத்தமிட்டவாறே கிராமத்தில் மக்கள் செறிந்து வாழும் பகுதியை நோக்கி ஓடலானான். அவன் ஓடியபோது பள்ளத்தில் தடுக்கி கீழே வீழ்ந்தான். அப்போது அவன் முகம் நிலத்தில் பலமாக மோதியது. மேலும் ஏதோவொன்று அவனை படுபயங்கரமாகத் தாக்கியது. அவன் மூக்கிலும் வாயிலும் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அதைத் தொடர்ந்து அவனின், "அம்மா! அம்மா!" என்ற முனகல் சத்தம் சிறிது சிறிதாக அடங்கியது. அவ்வளவுதான் அந்த இளைஞன் பின்னர் எழுந்திருக்கவேயில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அனிலுக்கும் அவருடைய அம்மாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: **පුතා, හෙට ගෙට ගෙවදීමේ උත්සවයට කීදෙනෙක් එනවද?**
புதா, ஹெட கெட கெவதீமே உத்சவயட கீ தெனெக் எனவத?
அம்மா: மகன், நாளைக்கு புதுவீடு குடிபுகும் வைபவத்திற்கு எத்தனை பேர் வருகிறார்கள்?



අනිල්: **ඔක්කොම විස්සයි.**
ஒக்கொம விஸ்ஸய்.
அனில்: மொத்தம் இருபது பேர்.

**හෙට කෑමට මොනවද හදන්නේ අම්මේ?**
ஹெட கேமட மொனவத ஹதன்னே அம்மே?
நாளை சாப்பாட்டுக்கு என்ன சமைக்கிறீர்கள் அம்மா?

අම්මා: **කුකුල් මස්, මාලු, අල, වම්බටු, පරිප්පු, පපඩම් ඇති නේද?**
குகுள் மஸ், மாலு, அள,வம்படு, பரிப்பு, பபடம் எதி நேத?
அம்மா: கோழி இறைச்சி, மீன், கிழங்கு, கத்தரிக்காய், பருப்பு, அப்பளம் போதும்தானே?

අනිල්: **හොඳටම ඇති.**
ஹொந்தடம எதி.
அனில்: நன்றாகப் போதும்.



අම්මා: **ඔයා අද හවසම බඩු ගෙනත් දුන්නොත් හොඳයි.**
ஒயா அத ஹவசம படு கெனத் துன்னொக் ஹொந்தய்.
அம்மா: நீங்கள் இன்று பின்னேரமே சாமான்களை கொண்டுவந்து கொடுத்தால் நல்லது.

අනිල්: **හොඳයි අම්මේ. මම හවස බඩුටික ගෙනත් දෙන්නම්.**
ஹொந்தய் அம்மே. மம ஹவச படுடிக கெனத் தென்னம்.
அனில்: நல்லது அம்மா. நான் பின்னேரம் சாமான்களைக் கொண்டுவந்து தருகிறேன்.

**අම්මට තනියම උයන්න පුළුවන්ද?**
அம்மட தனியம உயன்ன புலுவந்த?
அம்மாவுக்குத் தனியாகச் சமைக்க முடியுமா?



අම්මා: **එහා ගෙදර කමලා එන්නම් කිව්වා.**
எஹா கெதற கமலா என்னம் கிவ்வா.
அம்மா: அடுத்த வீட்டுக் கமலா வருவதாகச் சொன்னாள்.

අනිල්: **ඒක හොඳයි අම්මේ.**
ஏக ஹொந்தய் அம்மே.
அனில்: அது நல்லது அம்மா.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

***உதாரணம்:*** நாளை சாப்பாட்டுக்கு என்ன சமைக்கிறீர்கள் அம்மா?
**හෙට කෑමට මොනවද හදන්නේ අම්මේ?**

i. பின்னேரமே சாமான்களைக் கொண்டுவந்து கொடுத்தால் நல்லது.
..............................................................................

ii. அம்மாவுக்குத் தனியாகச் சமைக்க முடியுமா?
..............................................................................

iii. அடுத்த வீட்டுக் கமலா வருவதாகச் சொன்னாள்.
..............................................................................






**'Was'** எனும் இறந்தகால துணைவினைச் சொல்லை (Past Tense Auxiliary Verb) நிகழ்கால எச்சவினைச் சொல்லுடன் (Present Participle) சேர்த்து உருவாக்கப்படும் வாக்கியம், இறந்தகால தொடர்வாக்கியம் (Past Continuous Tense) என்பதாகும். மேலும் உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Yesterday night I was drawing a picture.
நேற்று இரவு நான் படம் ஒன்றை வரைந்துகொண்டு இருந்தேன்.

✱ I was drawing a picture.
நான் படம் ஒன்றை வரைந்துகொண்டு இருந்தேன்.

✱ I was drawing.
நான் வரைந்துகொண்டு இருந்தேன்.

(ஆ) Yesterday morning Ranjith was playing.
நேற்றுக் காலை ரஞ்ஜித் விளையாடிக்கொண்டு இருந்தான்.

✱ Ranjith was playing.
ரஞ்ஜித் விளையாடிக்கொண்டு இருந்தான்.

(இ) Yesterday afternoon Lalitha was eating.
நேற்றுப் பிற்பகல் லலிதா சாப்பிட்டுக்கொண்டு இருந்தாள்.

✱ Lalitha was eating.
லலிதா சாப்பிட்டுக்கொண்டு இருந்தாள்.

(ஈ) Yesterday night our dog was barking.
நேற்று இரவு எங்கள் நாய் குரைத்துக்கொண்டு இருந்தது.

✱ Our dog was barking.
எங்கள் நாய் குரைத்துக்கொண்டு இருந்தது.

(உ) Yesterday night your brother was talking to me.
நேற்று இரவு உனது சகோதரன் என்னுடன் கதைத்துக்கொண்டு இருந்தான்.

✱ Your brother was talking to me.
உனது சகோதரன் என்னுடன் கதைத்துக்கொண்டு இருந்தான்.

✱ Your brother was talking.
உனது சகோதரன் கதைத்துக்கொண்டு இருந்தான்.

(ஊ) Yesterday night your sister was listening to the radio.
நேற்று இரவு உனது சகோதரி வானொலியை செவிமடுத்துக்கொண்டு இருந்தாள்.

✱ Your sister was listening to the radio.
உனது சகோதரி வானொலியை செவிமடுத்துக்கொண்டு இருந்தாள்.

✱ Your sister was listening.
உனது சகோதரி செவிமடுத்துக்கொண்டு இருந்தாள்.

(எ) Yesterday morning your father was walking.
நேற்றுக் காலை உனது தந்தை நடந்துகொண்டு இருந்தார்.

✱ Your father was walking.
உனது தந்தை நடந்துகொண்டு இருந்தார்.

(ஏ) Yesterday night your mother was cooking.
நேற்று இரவு உனது தாய் சமைத்துக்கொண்டு இருந்தார்.

✱ Your mother was cooking.
உனது தாய் சமைத்துக்கொண்டு இருந்தார்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



◆ முகம்மது நபி அவர்கள் பிறந்த இடம் 'மக்கா' ஆகும். கிறிஸ்தவ சமயத்தைப் போதித்த இயேசுநாதர் பிறந்த இடம் எது?

**பெத்லேகம்**



◆ மனிதகுல வரலாற்றில் நதிக்கரைகளில் தோன்றிய நாகரிகங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. அந்தவகையில், யூப்ரடீஸ், டைகிறீஸ் நதிப் பள்ளத்தாக்குகளில் தோன்றிய நாகரிகம் எது?

**பபிலோனிய நாகரிகம் அல்லது சுமேரிய நாகரிகம்**



◆ பின்வரும் வானொலி ஒலிபரப்புக்கள் எந்த நாடுகளில் இருந்து ஒலிபரப்பாகின்றன?

ABC **அவுஸ்திரேலிய வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

BBC **பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

CBC **கெனடா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**



◆ 'அசிடிக் அசிட்' ரசாயனப் பெயர் கொண்ட பொருள் சாதாரண வழக்கில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

**வினாகிரி**



◆ கவிக்குயில் என அழைக்கப்பட்டவர் யார்?

**சரோஜினி நாயுடு அம்மையார்**



◆ பஞ்சவாவிகள் என அழைக்கப்படும் வாவிகள் எவை?

**சுபிரியர், ஹியுரன், ஈரி, மிக்சிகன், ஒண்டாரியோ**



◆ கோட்டேயில் அமைந்துள்ள நாடாளுமன்றக் கட்டடத்தை நிர்மாணித்த பொறியியலாளர் யார்?

**ஜிப்ரி பாவா - 1989 இல்**



◆ பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் ஜனநாயக நாடு எது?

**நியூஸிலாந்து**



◆ உலகில் மிகப்பெரிய மாமிசம் உண்ணும் பிராணி எது?

**துருவக்கரடி**



◆ இலங்கையில் முதலாவது பிரதமர் 'தேசபிதா' டீ.எஸ்.சேனாநாயக்க அவர்களாவார். சுதந்திர இலங்கையின் இரண்டாவது பிரதமர் யார்?

**டட்லி சேனாநாயக்க**



◆ முதன்முதலாக 'நொபெல் பரிசு' பெற்ற பெண்மணியின் பெயர் என்ன?

**மேடம் மேரி கியுரி அம்மையார்**



◆ இலங்கையில் விளையாட்டுத் துறையில் பட்டப் படிப்பை மேற்கொள்ளக்கூடிய பல்கலைக்கழகம் எது?

**களனிப் பல்கலைக்கழகம்**

◆ 'சார்க்' நாடுகளின் ஆரம்ப மாநாடு எப்போது நடைபெற்றது?

1985 இல்

◆ முதன்முதலாகப் பணம் செலுத்தி உல்லாசப் பயணியாக விண்வெளிக்குச் சென்றவர் யார்?

டெனிஸ் டிட்டோ

**தொகுப்பு - உடுவை பரந்தாமன்**

# கடும் பனியினால் மக்கள் அவதியில்...





ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள கடும்பனியின் காரணமாக, மொஸ்கோ நகரிலுள்ள விமான நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளமையால் ஏராளமான விமானப் பயணிகள் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், லட்சக்கணக்கானவர்கள் மின்சாரத் துண்டிப்பிற்கு முகம் கொடுக்க நேரிட்டதாகவும், அதன் காரணமாக, போக்குவரத்திலும் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் தெரிகிறது.

அத்துடன், அதிகளவிலான பனிப்பொழிவினால் வீதிகளில் கூடுதலான வாகன விபத்துக்கள் நிகழ்வதாகவும் எனவே, இக்காலநிலையில் மாற்றம் நிகழும் வரை மக்கள் தேவையற்ற பயணங்களையும் பனிபடந்த இடங்களில் நடமாடுவதையும் தவிர்க்க வேண்டும் எனவும் அரசாங்கத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதனால், மக்கள் தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# தீயில் கருகிய சாகஸ மிருகங்கள்



ரஷ்யாவின் சென்.பீற்றர்ஸ் பேர்க் என்ற நகரத்தில் அமைந்துள்ள மிருகங்களின் சாகஸங்கள் நடத்தப்படுகின்ற கூடாரமொன்று தீப்பற்றியதால் ஐம்பதிற்கும் மேற்பட்ட மிருகங்கள் இறந்துள்ளன.

சாகஸ நிகழ்ச்சிகளுக்கென நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட மிருகங்கள் பல இவ்வாறு மரணமாகியமை பெரும் இழப்பாகவே அதிகாரிகள் கருதுகின்றனர். இங்கு பரவிய தீ இரண்டு மணி நேரத்தின் பின்னரே அணைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# 'விக்கிலீக்ஸ்' ஸ்தாபகர் சுயசரிதை எழுதவுள்ளார்...

இணைய சேவையின் ஊடாக, பல நாடுகளின் ரகசியத் தகவல்களை வெளியிட்ட விக்கிலீக்ஸ் இணைய சேவையின் ஸ்தாபகரான ஜூலியன் அசேஞ் சுயசரிதை நூலொன்றை வெளியிட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கென இவர் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்.

சுவீடன் நீதிமன்றத்தால் ஜூலியன் அசேஞ் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அந்த வழக்கிற்கு முகம் கொடுப்பதற்கு போதிய பண வசதி இல்லாமையின் காரணமாக, அதற்கான நிதியைத் திரட்டுவதற்காகவே அவர் இவ்வாறு சுயசரிதை நூலொன்றை வெளியிடுவதாக அறிவித்துள்ளார்.



ஏற்கனவே வழக்குகளுக்காக 200,000 ஸ்டேரிலிங் பவுன்ஸ் அளவில் செலவு செய்துள்ள அசேஞ், தனக்கு மேலும் பணம் தேவைப்படுகின்ற காரணத்தினால் குறித்த சுயசரிதை நூலை எழுதுகின்றமைக்காக, அமெரிக்காவின் நூல் வெளியீட்டாளரான எல்பர்ட் நோப் என்பவரிடமிருந்து 800,000 அமெரிக்க டொலர்களையும், பிரிட்டனின் கொனொன் கெட் என்ற நிறுவனத்திடமிருந்து 500,000 அமெரிக்க டொலர்களையும் அறவீடாகப் பெறவுள்ளதாக அசேஞ் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கக் கேடானவர் என்று சுவீடனினால் குற்றஞ்சாட்டப்பட்ட அசேஞ் பிரிட்டனில் வைத்துக் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 289

**கேள்வி: 'விக்கிலீக்ஸ்' ஸ்தாபகர் சுயசரிதை நூலை எழுதுவதற்காக எத்தனை டொலர் பெறுமதியான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்?**

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 289,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 287 இன் சரியான விடை: ஜூலியன் எசென்ஞ்**

**பரிசு பெறுவோர்**

என்.எம்.ஹஸீப்,
136, பிரதான வீதி, வரிபத்தான்சேனை-02,
இறக்காமம்.

விஜயராம் நிஷாந்தினி,
204, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

எம்.இன்சாஃப்,
C/G/1 வித்தானகே மாவத்தை, கொழும்பு-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக்கார தொடர்ந்தும் முதலாம் இடத்தில்...



ஐ.சி.சி.யின் டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலின்படி, இலங்கை வீரர் குமார் சங்கக்கார முதலாம் இடத்தை தக்க வைத்துள்ளார். இரண்டாம் இடத்தில் இந்தியாவின் சச்சின் டென்டுல்கர் இரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் உள்ளார்.

மழையின் காரணமாக, இலங்கை மே.இ.தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டமையினால் மேலும் சில புள்ளிகளைப் பெறக்கூடிய வாய்ப்பினை சங்கக்கார இழந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

தரப்படுத்தல் பட்டியல் வருமாறு;

| இடம் | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | சங்கக்கார | 882 |
| 02. | டென்டுல்கர் | 880 |
| 03. | கெலிஸ் | 846 |
| 04. | ஷெவக் | 832 |
| 05. | டிவில்லியர்ஸ் | 806 |
| 06. | ஹஸி | 803 |
| 07. | மஹேல | 781 |
| 08. | சந்த்ரபோள் | 779 |
| 09. | அம்லடி | 768 |
| 10. | டிரொட் | 767 |




## ஒரே இன்னிங்ஸில்
# 498 ஓட்டங்களைப் பெற்ற பாடசாலை கிரிக்கெட் வீரர்

உலகில் பல்வேறு வகையிலான சாதனைகள் நடைபெறுவதை செய்திகளினூடே அறிகின்றோம். அவ்வாறே இந்திய பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் சாதனையொன்று நிகழ்த்தப்பட்டிருக்கும் செய்தியும் பிரபல்யத்தைப் பெற்றுள்ளது. அதாவது, 490 பந்துகளுக்கு முகம் கொடுத்து 498 ஓட்டங்களைப் பெற்று சாதனை நிகழ்த்திய மாணவனைப் பற்றியதே அந்த செய்தியாகும்.

இந்த மாணவனின் வயது 13. பெயர் ஆர்மன் ஜஃபர். அண்மையில் மும்பை நகரில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதிற்குக் கீழானோருக்கான போட்டியொன்றின்போது, ரிஸ்வி ஸ்பின்ங் ஃபீல்ட் என்ற பாடசாலையின் சார்பாக போட்டியிட்டபோதே இவர் இந்த சாதனையை நிகழ்த்தினார். ஐ.ஆர்.எஸ்.ராஜா சிவாஜி என்ற பாடசாலை அணிக்கு எதிரான இந்த போட்டியின்போது, பந்து வீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் விளாசி மிக விரைவாக ஓட்டங்களை இவர் குவித்தார்.

இவருக்கு முன்னதாக இதேபோன்றதொரு சாதனையை 461 ஓட்டங்களைப் பெற்று நாக்பூர் நகரின் அலி சொரேயின் கான் என்ற மாணவன் நிகழ்த்தி இருந்தான். அந்த சாதனையையும் தாண்டி 498 ஓட்டங்களைப் பெற்று ஆர்மன் ஜஃபர் அதனை முறியடித்துள்ளார். இரண்டு நாட்களாக தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஜஃபர் 77 பவுண்டரிகளை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தனது சாதனை குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஜஃபர், பந்தை உயர அடிக்காமல், நுணுக்கமாக அடிப்பதற்கு தான் தீர்மானித்திருந்ததாகவும், ஆட்டமிழக்காமல் களத்தில் இருப்பதில் அக்கறையுடன் இருந்ததாகவும் அதன் காரணமாகவே, தன்னால் இத்தனை கூடிய ஓட்டங்களைப் பெற முடிந்ததாகவும், ஐந்நூறு ஓட்டங்களைப் பெற்றிருந்தால் இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரது இந்த சாதனையை ஊடகங்கள் பல புகழ்ந்து பாராட்டியுள்ளன.



# ஹர்பஜன் ஏற்றத்தில்



நான்காவது ஐ.பி.எல். போட்டிகளுக்கான வீரர்களை ஏலம் விடுதல் எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் சில வீரர்களின் ஏல மதிப்பு அதிகரித்தும், இன்னும் சிலரின் மதிப்புக் குறைந்தும் உள்ளன. அண்மைக்காலமாக அவ்வவ் வீரர்கள் தத்தமது நாடுகளின் சார்பான போட்டிகளின் போது, காட்டியுள்ள திறமைக்கு ஏற்பவே, இந்த மதிப்பீடு ஏற்பட்டுள்ளது. அந்த வரிசையில் இந்திய அணியின் ஹர்பஜன் சிங்கிற்கே அதிகளவு ஏலத் தொகை நிர்ணயிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மைய டெஸ்ட் போட்டிகளில் அடுத்தடுத்து இரண்டு சதங்களை அடித்து சகலதுறை ஆட்டக்காரராகத் தன்னை உயர்த்திக்கொண்டதன் பேரிலேயே அவருக்கு இந்த மவுசு ஏற்பட்டுள்ளது.

# இலங்கையில் நாற்பது நாடுகளின் விளையாட்டுப்போட்டி






இலங்கையில் மூவாயிரம் விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளும் விளையாட்டுப் போட்டிகள் அடுத்த வருடம் செப்டெம்பர் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கிட்டத்தட்ட நாற்பது நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இந்த விளையாட்டுக்களில் கலந்துகொள்ளவுள்ளனர். பெட்மின்டன், கரையோர கால்பந்தாட்டம், கரையோர கைப்பந்தாட்டம் போன்ற போட்டிகள் இதில் இடம்பெறவுள்ளன. இதன்படி, செப்டெம்பர் 16 தொடக்கம் 19 வரை கரையோர கால்பந்தாட்டமும், 29 முதல் ஒக்டோபர் 9 வரை கரையோர கைப்பந்தாட்டமும், 13 தொடக்கம் 23 வரை மேசைப்பந்தாட்டமும், நொவெம்பர் 17 தொடக்கம் 27 வரை கரையோர கரப்பந்தாட்டமும் நடைபெறவுள்ளன.

இலங்கையில் சுற்றுலாத் துறையை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கிலேயே இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. நாட்டின் வடக்கு, கிழக்கு உட்பட முக்கிய நகரங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

# சல்மன் பட்டிற்கு அதிகபட்ச தண்டனை

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகளுக்கு உள்ளாகியுள்ள பாகிஸ்தான் வீரர்களில் சல்மன் பட் ஏழு வருடகால கிரிக்கெட் தடைக்கு உள்ளாகக்கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள மொஹமட் ஆசீப், மொஹமட் ஆமீர் ஆகிய இரண்டு பேருக்கு இரண்டு வருடகால போட்டித்தடை விதிக்கப்படலாம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. அடுத்த மாதம் நடைபெறவுள்ள விசாரணைகளின் முடிவிலேயே இந்தத் தீர்ப்புக்கள் வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக சல்மன் பட் ஐ.சி.சியுடன் தொடர்ந்து கருத்து மோதல்களை நடத்தி வருவதாலும் ஒத்துழைக்க மறுப்பதாலுமே இவருக்கு அதிகப்படியான தண்டனை வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

அதிலும் ஆசிப், அமிர் ஆகிய இரண்டு பேரையும் குற்றம் செய்யத்தூண்டியவர் என்ற காரணத்தின் பேரிலும், சல்மன் பட்டுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சல்மன் பட் சார்பாக வழக்கில் வாதாட முன்வந்த வழக்கறிஞர்கள் பலர் ஒவ்வொருவராக பின்வாங்கி வருவதும் பட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய பயிற்றுனர் ஓய்வு பெறக்கூடும்...?



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக உள்ள கெரி கேர்ஸ்டன் அடுத்து வரும் உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் ஓய்வு பெறக்கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது. இந்திய அணியின் தலைவரான தோனி தெரிவித்துள்ள கருத்துக்களின்படியே இந்த ஊகம் எழுந்துள்ளது.

தோனி தெரிவித்துள்ளதாவது, "ஒரு காலகட்டத்தில் இந்திய அணி மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தபோதே கேர்ஸ்டன் இந்திய அணியின் பயிற்றுனராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், அவரின் நியமனத்தின் பின்னர் தான் இந்திய அணி எழுச்சியுடன் வெற்றிகளைப் பெற்று தரவரிசையிலும் முதலாம் இடத்தைப் பெற்றது.

உலகக் கிண்ணப் போட்டிகள் வரை அவர் எமது அணியின் பயிற்றுனராக இருப்பார் என்று நம்புகிறேன். அதுவரை அவரிடம் கற்கக்கூடிய பலதையும் கற்றுக்கொள்வோம். இந்திய அணிக்குக் கிடைத்த சிறந்தவொரு பயிற்சியாளர் அவர். பேச்சைவிட, செயலில் ஆர்வம் கொண்டவர். வீரர்களின் பலம், பலவீனம் இரண்டையும் கண்டறிந்து அவற்றை சீர்படுத்துவதில் கைதேர்ந்தவர் கேர்ஸ்டன்" என்று தோனி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவைப் பற்றிய விசித்திரத் தகவல்கள்

நிலவில் முயலைப் போன்றதொரு தோற்றம் தெரிவதனால் அங்கு முயலொன்று இருப்பதாக நாம் சிறுவயதில் கருதிவந்தோம். ஆனால், அமெரிக்கர்களோ, அங்கு மனிதன் ஒருவன் இருப்பதாகவே (Man in the moon) கூறிவந்தனர். அதாவது, மனித உருவத்தை ஒத்த தோற்றமொன்று சந்திரனில் காணப்படுவதே அவர்களின் இக்கருத்துக்குக் காரணமாகும். அத்துடன், சந்திரனில் முதன்முதலாகக் காலடி வைத்தவர்கள் எனும் பெருமையும் அமெரிக்கர்களையே சார்ந்துள்ளது





## சந்திரனில் வேற்றுக்கிரக ஜீவிகளின் எச்சங்கள் இருக்கின்றனவா?

அண்மையில் சந்திரன் பற்றி மற்றுமொரு அற்புதமான கருத்து வெளியாகியுள்ளது. வேற்றுக்கிரக ஜீவிகள் சந்திரனில் இருப்பதாக வெளிவந்த செய்தியே அது. நாம் வேற்றுக்கிரக ஜீவிகள் இருப்பதாக சந்தேகப்பட்டு பெரும் பணச்செலவில் ஏனைய கிரகங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால், எமக்கு மிக அண்மையில் உள்ள சந்திரனில் அதற்கான ஆய்வுகளைச் செய்ய முனைந்ததில்லை. எனினும், சந்திரனில் இந்த வேற்றுக்கிரக ஜீவிகள் இருக்க வாய்ப்புள்ளதா? என்ற சந்தேகம் அண்மைக்காலத்தில் எழுந்துள்ளது.

சந்திரனிலும் அதன் அருகிலும் பல்வேறு வடிவங்களில் பிரகாசமான ஒளியுடன்கூடிய கண்ணாடியால் செய்யப் பட்டது போன்று காட்சியளிக்கும் சிறியதும் பெரியதுமான புதுமையான பறக்கும் வஸ்துக்கள் பயணிப்பதை காலத்திற்குக் காலம் காணக்கூடியதாக இருந்ததாக ஆய்வாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், அத்தகைய வடிவங்களில் உள்ள வஸ்துக்கள் சந்திரனில் இருக்க வாய்ப்பில்லை என்றும், அவை சந்திரனுக்குரியதல்ல என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சந்திரனில் நாகரிகமொன்று இருந்ததாகவும் அதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதனை இன்றுவரை வெளியிடாமல் 'நாஸா' நிறுவனம் மூடி மறைப்பதாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது. சந்திரனில் நிலவிய நாகரிகம் குறித்துக் கிடைத்துள்ள தரவுகளையும் தகவல்களையும் நாஸா நிறுவனம் தன்வசம் வைத்துள்ளது என 'என்டர்ப்ரைஸ் மிஷன்' எனும் தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் நிறுவனர் ரிச்சர்ட் ஹொக்லேண்ட் தெரிவிக்கின்றார். இவர் நாஸா நிறுவனத்தின் முன்னாள் ஆலோசகராகவும் அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாநில ஸ்பிரிங்பீல்ட் விஞ்ஞான அரும்பொருள்காட்சியகத்தின் தலைவராகவும் செயற்பட்டவர். மேலும், 'அப்பலோ' விண்வெளிப் பயணங்களின்போது, அமெரிக்காவின் சி.பி.எஸ்.செய்திச்சேவையின் ஆலோசகராகவும் கடமை புரிந்துள்ளார். இவர், 40 வருடங்களுக்கு முன்னர் மனிதனுடன் அல்லது மனிதன் இல்லாமல் மேற்கொள்ளும் விண்வெளிப் பயணங்கள் குறித்து சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டவராவார்.

ஹொக்லேண்ட் மேலும் கூறுகையில், ''சந்திரனின் சுற்றுப்பாதையில் இருந்து கிடைத்த புகைப்படங்கள் சந்திரனின் மேற்பரப்பில் புராதன நகரின் எச்சங்கள் இருப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. சந்திரனில் காலடி வைத்த விண்வெளி வீரர்கள்கூட, இதனைத் தெரிவித்துள்ளனர். அதனை உறுதிப்படுத்தும் வகையில் புகைப்படங்களையும் அவர்கள் எடுத்துள்ளனர். இவையனைத்தும் வேற்றுக்கிரக ஜீவிகள் மிக முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தை முற்காலத்திலேயே கொண்டிருந்துள்ளனர் என்பதற்கு உறுதியான ஆதாரமாக விளங்குகின்றன'' என தெரிவித்துள்ளார். நாஸா நிறுவனம் அமெரிக்க மக்களிடம் மறைத்த உண்மைகள் பற்றி 'டார்க் மிஷன் ஹிஸ்ட்ரி ஒஃப் நாஸா' எனும் பெயரில் நூல் ஒன்றையும் இவர் எழுதியுள்ளார்.

## இருண்ட பகுதி



புவியை ஒருமுறை சுற்றிவர சந்திரனுக்கு 27 புவித்தினங்கள் எடுக்கின்றன. புவியில் இருக்கும் எமக்கு எப்பொழுதும் சந்திரனின் ஒரு பகுதி மாத்திரமே தெரிகின்றது. எமக்குத் தெரியாத மறுபகுதி 'The dark side of the moon' என்று அழைக்கப்படுகின்றது. அதாவது, 'சந்திரனின் இருண்ட பகுதி' எனப்படுகின்றது. நாம் இன்றுவரை அந்த இருண்ட பகுதியை உரிய முறையில் முழுமையாக ஆய்வு செய்யவில்லை. எனினும், 1959 ஆம் ஆண்டு [illegible] ஏவப்பட்ட 'லூனா 3' எனும் ஆய்வுக் கலம் இருண்ட பகுதியில் புகைப்படங்களை எடுத்திருந்தது.

## எமது நெருங்கிய அயலவர்

புவியில் இருந்து சந்திரனுக்குள்ள தூரம் 3,84,000 கி.மீற்றர்களாகும். நாம் மணித்தியாலத்திற்கு 161 கி.மீற்றர் வேகத்தில் பயணிக்கும் புகையிரதத்தில் ஏறி சந்திரனை நோக்கிச் சென்றால், 99 நாட்களில் சந்திரனை சென்றடையலாம். அமெரிக்கர்கள் 'அப்பலோ' பயணத் தொடர்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சந்திரன் குறித்து தெளிவினைப் பெறும்



நோக்குடன் விண்வெளிக்கு 50 இற்கும் அதிகமான விண்கலங்களை அனுப்பினர். இதன்பின்னரே 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி சந்திரன் மீது மனிதன் முதலில் காலடி வைத்தான். அந்தவகையில், நீல் ஆம்ஸ்ட்ரோங் என்பவரே சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றார். இவருடன் மைக்கல் கொலின்ஸ் மற்றும் எட்வின் ஒல்ட்ரின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## நிலவு பற்றிய அற்புதமான கதைகள்

சில நூற்றாண்டுகளுக்குள் மனிதன் விஞ்ஞானத்தில் நன்கு வளர்ச்சி அடைந்தமையால், நிலவுடன் தொடர்புடைய பல ரகசியங்களை உடைத் தெறியக்கூடியதாக இருந்தது. விஞ்ஞானிகள் நிலவினை விஞ்ஞானக் கண்



கொண்டு பார்த்து, அது குறித்துப் பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். பல்வேறு இலக்கியப் படைப்பாளிகளோ நிலவை பலவாறு உருவகித்தும் உவமித்தும் கதை, கட்டுரை, கவிதை என்பனவற்றை இயற்றினர். இவற்றில் பறக்கக்கூடிய சைக்கிளில் நிலவுக்குச் சென்ற ஆங்கிலேயரின் கதை, 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குருவியைப் பயன்படுத்தி, அதனை விமானமாக்கி அதில் நிலவுக்குச் சென்ற மனிதனைப் பற்றிய கதை போன்றன பிரபலமானவை.

## குழிகள் நிறைந்த சந்திரன்



புவியில் உள்ள மிகச் சக்திவாய்ந்த தொலைக்காட்டி மூலமாக சந்திரனில் உள்ள 5,00,000 இற்கும் அதிகமான குழிகளை (பள்ளங்கள்) தெளிவாகக் காணமுடியும். அவை அனைத்தையும் எண்ணுவதற்கு ஒருவருக்கு 400 மணித்தியாலங்கள் செலவாகும். இந்தக் குழிகள் அனைத்தும் சந்திரனில் எமக்குத் தெரியும் பகுதியிலேயே உள்ளன. ஆனால், எமது கண்களுக்குத் தெரியாத மற்றைய பகுதியில் எந்தளவு குழிகள் இருக்கும் என்பது பற்றி இன்னும் ஆராயப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்

'குறுக்கெழுத்துப் போட்டி', 'ஷொப்பிங் பேக்' என்பனவற்றின் ஆரம்பகாலம் குறித்த ஆக்கங்கள் என்னைக் கவர்ந்தன. சுறா மீன்கள் பற்றிய பல தகவல்களை உன்னால் அறிந்து கொண்டேன்.

**-கே.துஷாந், செபஸ்டியார் வீதி, மன்னார்.**

கண்ணுக்குக் காட்சி அளிப்பதெல்லாம் கல்விக்கு ஒப்பில்லை.ஆனால், விஜய்யில் காட்சியளிப்பதெல்லாம் கல்விக்கு ஒப்பாக இருக்கின்றன. 'இலங்கையின் பண்டைய தடாகங்கள்' பற்றி அறிந்தேன். 'வாரம் ஒரு நாடு' என்ற பகுதியில் ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் அறிந்தேன். அத்துடன், 'இராமாயணத் தொடர்', 'வேப்பமரத்தடிப் பேய்' போன்ற கதைகள் என் மனதைக் கவர்ந்தன.

**-இபாதா ரிப்கி, தரம்-8A, முஸ்லிம் ம.வித்., களுத்துறை.**

உயர்தர மாணவியாகிய நான் பாடசாலை தனிச் செயற்றிட்டத்துக்கு 'விண்வெளித் தகவல்கள்' எனும் தொனிப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளேன். 'விஜய்' விண்வெளித் தகவல்களை தொடர்ந்தும் பிரசுரமாக்கிவர வேண்டும். நீ தாங்கி வரும் தகவல்கள் உண்மையிலேயே தரம் மிக்கவை.

**-சுமையா ரமீஸ், அட்டுளுகம, பண்டாரகம.**

விஜய்யே! நீ தாங்கி வந்த அனைத்து விடயங்களும் சிறப்பாக இருந்தன. 'சுறாக்கள்' பற்றிய அதிசய-அரிய-தெரியாத பல விடயங்களை அறிந்து கொண்டேன். 'தெரிந்து கொள்வோம்' என்ற பொது அறிவுத் துளிகள், 'இலங்கையின் பண்டைய தடாகங்கள்', வேப்பமரத்தடிப் பேய்' போன்றன சூப்பர். கிணற்றுத்தவளை போல் இருந்த எம்மை உலகத்துடன் கலக்க வைத்த உனக்கு 10 ஆம் தர மாணவர்கள் சார்பாக வாழ்த்துகிறேன்.

**-இஹ்ராஸ் மின்ஸார், தரம் - 10B, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.**

'கற்றலுக்கான ஆலோசனைகள்', 'இலங்கையின் பண்டைய தடாகங்கள்', 'பட்டினிக்கு எதிராக அணி திரள்வோம்', 'சுறாக்கள்', 'மனிதனின் தொழிற்பாடும் நரம்பு மண்டலத்தின் செயற்பாடும்' போன்ற ஆக்கங்கள் சூப்பராக இருந்தன. கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் விஜய்க்கு நன்றி.

**-எம்.அல்ஃபர், காத்தான்குடி மத்.கல்., காத்தான்குடி.**



உன்னில் பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் மிக ஆக்கபூர்வமானதாக உள்ளன. 'வாரம் ஒரு நாடு', 'வேப்பமரத்தடிப் பேய்', 'விண்வெளித் தகவல்கள்' என்பன மிகவும் சுவாரஸ்யமாக உள்ளன.

**அ.அரிகரன், தமிழ் மத்.ம.வித்., வவுனியா.**



'பால் வீதிக்கு வெளியே பெரிய கோளொன்று கண்டுபிடிப்பு', 'மனிதனின் செயற்பாடும் நரம்பு மண்டலத்தின் தொழிற்பாடும்', 'அடிமைத்தனத்தை ஒழித்த ஆபிரகாம் லிங்கன்' மற்றும் 'சுறா' பற்றிய தகவல்கள் எமக்கு ஆச்சரியமூட்டத்தக்கதாகவும் வாசிக்கத் தூண்டுவதாகவும் பூரண பயனளிப்பதாகவும் அமைந்திருந்தன.

**-அஹ்லா ரபீக், கடுமையான்குளம் வீதி, புத்தளம்.**

'இலங்கையின் பண்டைய தடாகங்கள்', 'மனிதனின் தொழிற்பாடும் நரம்பு மண்டலத்தின் செயற்பாடும்', 'விக்கிலீக்ஸ் இணைய சேவையின் பின்னணி' என்பன மிகவும் பயனளித்தன. 'ஷொப்பிங் பேக் வந்ததெப்படி?' என்பது பற்றியும் தெரிந்துகொண்டேன். உன் சேவை காலம்தோறும் தொடர நான் வாழ்த்துகின்றேன்.

**-இஷ்ரான் அஹமட், தரம் - 9A, அல்-ஹம்ரா ம.வித்., தர்கா நகர்.**

இந்த இதழில் (05.01.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.01.2011.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

# வழி காட்டுங்கள் 3






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.01.12ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 294**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## சொற்களுடன் பொருந்தும் படத்துடன் இணைக்க 1

Green

Blue

Yellow

Pink

Orange



## அறிவுக்கு விருந்து 291 விடைகள்

போட்டி: 01




போட்டி: 05

1. செலவு
2. பந்தயம்
3. குறும்பு
4. ஐந்நூறு

போட்டி: 02

முகுந்தன் பல்வேறு கெட்டபழக்கங்களைப் பழகி வைத்திருந்தான். எவரேனும் இதுபற்றி அவனிடம் கேட்டால், "இந்த வயதில் இப்படியெல்லாம் இருக்க வேண்டும். காலம் செல்லச் செல்ல மாற்றிக்கொள்ளலாம்" என்று அலட்சியமாகப் பதில் கூறுவான். இதனைக் கவனித்துவந்த பெரியவர் ஒருவர் ஒருநாள் அந்த சிறுவனை தனது வீட்டுக்கு அழைத்து வந்து, தனது தோட்டத்திலுள்ள சிறிய செடி ஒன்றைக் காட்டி அதனைப் பிடுங்கச் சொன்னார். இரண்டாவதாக முதல் செடியிலும் சற்றுப்பெரிய செடியைக் காட்டிப் பிடுங்கச் சொன்னார். முகுந்தன் அதனை சற்று சிரமப்பட்டுப் பிடுங்கினான். மூன்றாவதாக ஒரு பெரிய மரத்தைக் காட்டிப் பிடுங்கச் சொன்னார். முகுந்தன் திகைத்துப் போய் "பெரியவரே! இந்தப் பெரிய மரத்தை நான் எவ்வாறு பிடுங்குவேன்?" என்றான். அதற்கு அந்தப் பெரியவர், "உன்னிடம் இருக்கும் கெட்டபழக்கங்களும் இப்படித்தான். அவை வளர்ந்துவிட்டால், இலகுவில் அதிலிருந்து நீ மீள முடியாதிருக்கும்" என்றார். முகுந்தனுக்கு அந்த விளக்கம் நன்றாகப் புரிந்தது. அன்றிலிருந்து அவன் அனைத்துக் கெட்டபழக்கங்களையும் கைவிட்டு விட்டான்.

## குழம்பியுள்ள வசனங்களை ஒழுங்கமைத்து குட்டிக்கதையைப் பெறுக 4

1. ஒருமுறை நண்பர்கள் மத்தியில் அவர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தபோது, மனிதனின் உடல் உறுப்புகள் எந்த அளவுக்கு நீளமாக இருக்க வேண்டும் என்ற பேச்சு வந்தது.
2. "என்ன கருத்து?" என நண்பர்கள் ஆவலுடன் கேட்டனர்.
3. அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் மிகவும் உயரமான மனிதர்.
4. "ஒரு மனிதனுக்குக் கால்கள் எந்த அளவுக்கு நீளமாக இருக்க வேண்டும் என்பது பற்றி எனக்குத் தெளிவான கருத்து உண்டு" என்றார் லிங்கன்.
5. லிங்கனின் அந்த நகைச்சுவையான பதிலைக்கேட்டு நண்பர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.
6. "சாதாரணமாக இடுப்பில் இருந்து தரையைத் தொடுகின்ற அளவுக்குக் கால்கள் இருந்தால் போதும்" என்றார் லிங்கன்.

## சரியான விடையில் கோடிடுக 5

1. விமானத்தை முதன்முதலில் போருக்குப் பயன்படுத்தியவர்கள்;
   *(இத்தாலியர்கள்/இந்தியர்கள்)*
2. அதிகமான தமிழ்ப் பத்திரிகைகள் வெளியாகும் நாடு;
   *(மலேசியா/இலங்கை)*
3. உலகின் சிறிய கண்டம்;
   *(ஆசியா/அவுஸ்திரேலியா)*

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 291 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அனஸ் அஹமட்,
14/1, மஹியங்கனை வீதி, பதுளை.

**போட்டி: 02**
கே.நாகலட்சுமி,
72/16A, சன்னிகுணவர்தன மாவ., ஹெந்தல.

**போட்டி: 03**
த.கிலேசிகா, 112, மாரசேன்ன வீதி, தலாத்துஓயா.


**போட்டி: 04**
எஸ்.சர்மா, 14, சாகர வீதி, கொழும்பு-04.

**போட்டி: 05**
மு.அப்துல்லாஹ்,
120B, பொது நூலக வீதி, மருத்முனை-02.

**பாராட்டுப் பெறுவோர்:**

- கு.நேசல்யா, யாழ்ப்பாணம்.
- எம்.என்.நஸீலா, காகம.
- கி.ஜெ.ஜதுஸ்ராஜ், மன்னார்.
- ஏ.அஷ்பா, அரநாயக்க.
- என்.பிரஷாந்தினி, அக்கரபத்தனை.
- சி.சரண்யா, ராஜகிரிய.
- பி.ஸபானா, இரத்தினபுரி.
- க.துஷாரா, சங்கானை.
- எம்.எச்.ரியாஸத் அலி, நுவரெலியா.
- உ.உஸாமா, திருகோணமலை.

## படங்களைக் கூட்டி சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் இடம்பெறும் 'டயரி'

டயரி எனப்படும் தினக் குறிப்புப் புத்தகம் மனித வாழ்க்கையில் மிகுந்த முக்கியத்துவம் பெறும் ஒரு பொருளாகும். தற்காலத்தில் பலரும் டயரியை அன்பளிப்பாகப் பெறுவதிலும் வாங்குவதிலும் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, அதனை முறையாகப் பயன்படுத்தத் தவறிவிடுகின்றனர். சிலரைப் பொறுத்தவரை வருட ஆரம்பத்தில் டயரியை வாங்குவதோடு சரி.வருடம் முடியும்வரை அதில் எந்தக் குறிப்பும் இருக்காது.ஆனால், டயரியை முறையாகப் பயன்படுத்தி அன்றன்று நடக்கும் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிட்டு வந்தால் அது ஒரு நாளில் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதையும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துவதையும் உணரலாம்.

நம் முன்னோர்கள் அப்படித்தான் டயரியைப் பயன்படுத்தினார்கள். அதனால்தான் அப்படிப்பட்டவர்களின் பல டயரிகள் இன்றும்கூட பயனளிப்பவையாக உள்ளன. உண்மையில் டயரி என்பது ஒரு முக்கிய பதிவு ஏடாகும். ஒவ்வொரு நாளிலும் அல்லது காலப் பகுதியிலும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்வதே டயரி பாவிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

வாழ்வில் கல்வி கலாசார விளையாட்டுப் போன்று அரசியல் விடயங்களிலும் டயரி முக்கியத்துவம் பெறுகிறது. டயரி எழுதுபவர் தனது சொந்த மற்றும் பொது விடயங்களை அதில் பதிவு செய்யலாம். ஒருவர் டயரியில் பதிவு செய்யும் குறிப்புக்கள் தமது சொந்த நலனுக்கே ஆயினும், சில சமயங்களில் பொது வாழ்விலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. மிகப்பழைமையான டயரிகள் மத்திய கிழக்கு மற்றும் கிழக்காசிய நாகரிகத்தில் இருந்து வந்துள்ளன. அராபிய டயரிகள் 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியுள்ளன.



சில முக்கியஸ்தர்களின் டயரிக் குறிப்புகள் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதி வெளியிட உதவியுள்ளன. இதனுடன் பல முக்கியத்துவமும்



அன் பிரேங்க்










பிரபல்யமும்பெற்ற டயரிகளில் ஒன்றாக அன் பிரேங்க் (Anne Frank) என்னும் சிறுமியின் டயரி விளங்குகின்றது.இவரின் டயரி பரவலாக வாசிக்கப்பட்டும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் உள்ளதோடு, பல திரைப் படங்கள், நாடகங்களுக்குரிய கதையின் கருப் பொருளாகவும் அமைந்தமை ஒரு வியப்படைய வைக்கும் விடயமாகும். அன் பிரேங்க் என்னும் இச்சிறுமி 1929 ஆம் ஆண்டு பிறந்தார் 1942 ஆம் ஆண்டு இவர்கள் குடும்பம் ஆக்கிரமிப்பாளர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து அம்ஸ்டர்டாமில் மறைந்து வாழ்ந்த காலப்பகுதியில் இவர் இந்த டயரியை எழுதியுள்ளார். 1945 இல் விஷக்காய்ச்சலால் இச்சிறுமியும் அவர் குடும்பத்தினரும் பலியானார்கள். இச்சிறுமியின் குடும்பத்திலிருந்து உயிர் தப்பிய ஒரே ஒருவரான இவரின் தந்தை ஒட்டோ பிரேங்க் (Otto Frank) இச்சிறுமி எழுதிய டயரியை 'ஒரு சிறுமியின் டயரி' (The Diary of a Young Girl) என்னும் பெயரில் அச்சிட்டு வெளியிட்டார். அது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த டயரி இச்சிறுமிக்கு 1942 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி அவரின் 13 ஆவது பிறந்த தினத்தின்போது அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.

# இதயத் துடிப்பைக் கண்காணிக்கும் 'சிப்'!



இதயத் துடிப்பை 24 மணி நேரமும் கண்காணிக்கக்கூடிய ஒரு 'மைக்ரோசிப்'பை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கின்றனர்.

ஓர் அரிசி மணி அளவே உள்ள இந்த 'சிப்' ஒரு நுண்ணிய குழாய் வழியாக தோலுக்குள் செலுத்தப்படும். அங்கிருந்தபடியே கண்காணிப்பு வேலையை இது தொடரும்.



இதயத்தின் செயற்பாட்டை அளவிடும் வகையில் இந்த 'சிப்' வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு விநாடிக்கு 200 முறை குருதி அழுத்தத்தை அளவிடும். அதன்மூலம், மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புப் போன்றவற்றை இந்த 'சிப்' ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அறிவித்துவிடும். இந்த 'சிப்' பொருத்தப்பட்டவரின் மார்புக்கு அருகில் மருத்துவர் தனது கையடக்கத் தொலைபேசியை வைத்தால் போதும். தான் கண்டுபிடித்தவற்றை அந்த ரிசீவருக்கு ப்ளூடூத் மூலம் 'சிப்' அனுப்பிவிடும்.

இதயத்தைக் கண்காணிப்பதற்கான தற்போதைய தொழில்நுட்பத்தின் குறைபாடு, இதயத்தில் என்ன நடக்கிறது என்பதை குறுகிய காலத்துக்கு மட்டுமே அது தெரிவிக்கின்றது. நாள் கணக்கில், வாரக்கணக்கில் இதயத்தைக் கண்காணிப்பதில்லை. அந்தக் குறையை இந்த 'சிப்' போக்கிவிடும் என்று கூறப்படுகிறது.



இதன்மூலம், இதயத்தில் பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்துவிட்டால், மருந்து, அறுவை சிகிச்சை மூலம் இதயத்தின் செயற்பாட்டைச் சீரமைத்து பாதிப்பைத் தவிர்க்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## யோகாசனம் பயில்வோம்

### நின்ற பாதாசனம்




**ஒரு காலில் நின்று மற்றக்காலை மடித்து ஆசனவாயிலில் படும்படி வைத்துக் கொண்டு கைகளை இணைத்து தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட்ட நிலையில் நிற்க வேண்டும். இதேபோன்று, மற்றக்காலையும் மாற்றிச்செய்ய வேண்டும். இதனை மற்ற ஒரு நிலையிலும் செய்யலாம். காலைத் தொடையின் மேல் பத்மாசனம் போட வைப்பது போல் வைத்து நிற்க வேண்டும். இதையும் இரண்டு கால்களாலும் மாறி மாறிச் செய்யலாம்.**

பலன்கள்:

**முதுகுத்தண்டு பலம் பெறும். இளமைப் பொலிவு ஏற்படும். சிரசாசனத்திற்கும் அர்த்த சிரசாசனத்திற்கும் மாற்று ஆசனம். மன ஒருமைப்பாட்டுக்கு இது சிறந்த ஆசனம். வாதம், மனச்சஞ்சலம், சோம்பல் என்பன நீங்கும். மகாபாரதத்தில் அர்ச்சுனன் 'பாசுபதாத்திரம்' பெறுவதற்கு இந்த ஆசனத்திலிருந்துதான் சிவபெருமானை நினைத்துக் கடும் தவம் செய்ததாகக் கூறப்படுகின்றது.**

# புராதன காலத்தில் சவர்க்காரம்

சவர்க்காரம் கி.மு 1000 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ரோமிலுள்ள 'சப்போ' மலையின் அடிவாரத்திலிருந்தே சவர்க்கார உற்பத்தி ஆரம்பமானதாகவும் அதனாலேயே, அதற்கு 'சோப்' என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

அக்காலப் பகுதியில் ஒருநாள் 'சப்போ' மலையின் அடிவாரத்தில் ஓடும் ஆற்றில் சில பெண்கள் தமது ஆடைகளைக் கழுவிக்கொண்டு இருந்துள்ளனர். அந்தமலையின் ஓர் உயரமான இடத்தில் மிருகங்களைப் பலியிடும் வேலைகள் நடைபெற்றுள்ளன. அந்த இடத்திலிருந்து கரைந்துவரும் மண், உடைகளில் படும்போது அந்த உடைகள் ஆச்சரியப்படும் வகையில் சுத்தமாவதை அந்தப் பெண்கள் அவதானித்துள்ளனர். மிருகக் கொழுப்பானது மண்ணுடன் கலந்து ஆடையில் படும்போது, அவை சுத்தமாவது இதிலிருந்து தெரியவந்தது. இதுவே சவர்க்கார உற்பத்திக்கு அடித்தளமாக அமைந்துள்ளதாகவும் தெரிகிறது.




படிப்படியாக மிருகக்கொழுப்பைக் காய்ச்சி அதனுடன் மரப்பிசினையும் கலந்து சவர்க்காரம் தயாரித்துள்ளனர். காலப்போக்கில் சவர்க்காரத்தின் கெட்டித்தன்மைக்காக அந்தக் கலவையில் உப்பு நீரும் சேர்க்கப்பட்டது. தாவர அல்லது விலங்குக் கொழுப்பு, எண்ணெய், பொட்டாசியம் அல்லது சோடியம் கலந்த உப்பு, வாசனைப் பொருட்கள், நிறக்கலவைகள் சேர்த்து தற்போது வகைவகையான சவர்க்காரங்கள் தயாரிக்கின்றனர். உடலில் தேய்த்துக் குளிக்கும் சவர்க்காரத்தில் பொட்டாசியம் உப்பும் துணி துவைக்க உபயோகிக்கும் சவர்க்காரத்தில் சோடியம் உப்பும் சேர்க்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பக்கவாத நோயாளிகளும் தொலைக்காட்சியை இயக்கக்கூடிய புதுவகைக் கருவி கண்டுபிடிப்பு!

பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் உடல் பாகங்கள் இயங்காத நிலையில் இருப்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்டவர்கள் தொலைக்காட்சியை அல்லது கணினியை சுயமாகப் பயன்படுத்துவது இயலாத காரியமாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், புதிய கண்டுபிடிப்பொன்றின் மூலம் இத்தகையவர்களும் தொலைக்காட்சி, கணினியை இயக்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.



அதாவது, பக்கவாத நோய்க்கு ஆளானவர்கள் தமது உடல் பகுதிகளை இயக்க முடியாத போதிலும் அவர்கள் என்ன செய்ய விரும்புகின்றனர் என்ற எண்ணவோட்டம் அவர்களின் மூளையிலிருந்து கட்டளைகளாக, சமிக்ஞைகளாக வெளிவரத்தான் செய்கின்றன. எனவே, இந்தக் கட்டளை, சமிக்ஞைகளை உள்வாங்கி செயற்படக்கூடிய கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் 'பக்கிங்ஹேறாம்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜோன் ஸ்பாட் லீ என்ற 30 வயதுடைய ஆராய்ச்சியாளரே இந்தக் கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளார். இந்தக் கருவியானது மூளையிலிருந்து வெளிவருகின்ற சமிக்ஞைகளை, கட்டளைகளை உணரக்கூடிய 'நெனோ' நுணுக்கத்தைக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கருவியாகும்.




இது எவ்வாறு தொழிற்படுகின்றது என்றால், பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவர் ஒருவர் தனது கையை அல்லது உடலின் ஏதாவது ஒரு பகுதியை அசைக்க முற்படும்போது, அதற்கான சமிக்ஞை மூளையிலிருந்து வெளிப்படுகின்றது. அந்த சமிக்ஞையானது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'சிப்'பினால் (chip) உணரப்பட்டு தலைப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள ரிலே (Relay) எனப்படும் சமிக்ஞை தெறிப்புக் கருவியினால் உள்வாங்கப்பட்டு, அதே சமகாலத்தில் கதிர் அலைகளாக வெளியேற்றப்படுகின்றது.

இவ்வாறு கதிர் அலைகளாக, வெளியேற்றப்படுகின்ற சமிக்ஞைகளை உள்ளீர்த்து செயற்படக்கூடிய மற்றுமொரு 'ரிஸிவர்' கருவி தொலைக்காட்சியில் பொருத்தப்பட்டிருக்கும். இந்த 'ரிஸிவர்' கருவியை வந்தடைகின்ற சமிக்ஞையின்படி, தொலைக்காட்சி இயக்கப்படும். குறிப்பாக, பக்கவாத நோய்க்கு ஆளாகியுள்ள ஒருவர் தொலைக்காட்சியின் அருகே இருந்தவாறு தொலைக்காட்சியை இயக்குவதற்கு எண்ணினாலே போதும், உடனே அந்த எண்ணம் சமிக்ஞையாக முன்குறிப்பிட்ட கருவிகள் ஒவ்வொன்றினூடாக, உள்வாங்கி தொடர்புபடுத்தப்பட்டு இறுதியாக தொலைக்காட்சியில் உள்ள 'ரிஸிவரை' அடைந்து அதற்கமைய, தொலைக்காட்சி செயற்படத் தொடங்கிவிடும். இவ்வாறே அலைவரிசைகளை மாற்றுவது முதற்கொண்டு தொலைக்காட்சியின் எந்தவொரு கட்டுப்பாட்டையும் இயக்க முடியும்.

மனதில் நினைப்பதை செயற்படுத்தும் ஓர் அபூர்வ நிகழ்வாகக்கூட இதனைக் கருதமுடியும். இந்த வழிவகையை அடியொட்டி சுவிட்ச்களை போடுவது, கணினியை இயக்குவது போன்ற செயல்களையும் செய்யமுடியும். 'டெலிபதி' முறையில் இந்த தொழில்நுட்பம் அமைந்துள்ளமையினால் இது 'டெலிபதி டிவைஸஸ்' என்றே குறிப்பிடப்படுகின்றது.



பிரிட்டனின் '42 டெக்னொலொஜி' (42 Technilogy) என்ற நிறுவனத்தில் கடமையாற்றி வருகின்ற ஜோன் ஸ்பாட்லியிடம் கூடிய விரைவாக இந்த 'டெலிபதி டிவைஸஸ்' முறையினை முழுமைப்படுத்திப் பாவனைக்கு விடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பக்கவாத நோயாளிகளுக்கு உதவக்கூடிய இவ்வாறான தொழில்நுட்ப ரீதியிலான வெற்றிகரமான ஒரு வழிமுறை இதுவரை அறிமுகமாகாத நிலையில் தற்போது, இதற்கென 'டெலிபதி டிவைஸஸ்' என்ற வழிமுறையைக் கண்டுபிடித்துள்ளமையால் ஜோன் ஸ்பாட்லிக்கு பிரிட்டனின் பொறியியல் நிறுவனமொன்றினால் மெடிமெட்டன் (Medimatan) என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கூடிய விரைவில் இந்த நவீன கருவி பாவனைக்கு வந்துவிடும் என்றே கருதப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஜனவரி மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 05, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org